Registered as a Newspaper

[illegible] ரூபா 5.00

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | மாசி 15 | (27.02.94) | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 09

## பதிவுசெய்யப்படாத ஊர்திகளுக்கு குற்றப்பண அறவீட்டில் சட்டதிருத்தம்

1993ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க தமிழீழ மோட்டார் ஊர்திகள் பதிவுச் சட்டத்தில் சில மேலதிக விபரங்களைச் சேர்ப்பது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நீதி நிர்வாகத் துறையினர் சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளனர். இச் சுற்றுநிருபம் 1994ஆம்ஆண்டு மார்ச் முதலாம் திகதி (நாளை மறுதினம்) முதல் செல்லுபடியாகும்: அதன் விபரம் வருமாறு: 01. தமிழீழ மோட்டார் ஊர்திகள் பதிவுச் சட்டத்தின் பிரிவு 13 நீக்கப்பட்டு அதற்கீடாக இவ்விடயம் சேர்க்கப்படுகிறது; பிரிவு 13இன் படி மோட்டார் ஊர்தியையோ அல்லது அடிச்சட்டத்தையோ அல்லது இயந்திரத்தையோ அதை வைத்திருப்பவர் பதிவு செய்து கொள்ளத் தவறும்போது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# நிவாரணத்தில் பெரும் வெட்டு; அரசாங்கம் தீவிர முயற்சி!

## பெருமளவு நிதிபோருக்குவழங்கமுடிவு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு அரசாங்கம் வழங்கி வரும் நிவாரணத்தில் பெரும் வெட்டை ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது இதனை ஒரு பகுதியினருக்கு நிவாரணத்தை முழுமையாக வெட்டுவதன் மூலமும், ஒரு பகுதியினருக்கு நிவாரணம் பெற புதிய நிபந்தனைகளைவிதிப்பதன்மூலமும் நிறைவேற்றப் பார்க்கின்றது. இவ்விதம் இப்பெரும் நிவாரண வெட்டால் கிடைக்கும் பெருந்தொகை நிதியை இராணுவ தேவைக்கு அரசு பயன்படுத்த முற்பட்டுள்ளதாகவும் அறிய வருகின்றது.

இதன் முதற் கட்ட நடவடிக்கையாகவே மார்ச் முதலாம் திகதி முதல் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை வெட்ட அரசாங்கம் தீர்மானித்துள்ளது, இதனால் பல்லாயிரக் கணக்கான மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

அடுத்ததாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதகளில் மீளக்குடியேறாத அகதிகளின் நிவாரணத்தை நிறுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதுமார்ச்31-ம்திகதி முதல் அமுலாகும் என்று புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, அம்பாறை, மன்னார் ஆகிய மாவட்டங்களில் சிறிலங்கா இராணுவத்தினரால் பாதுகாப்பான இடம் என பிரகடனப்படுத்தப்பட்டபகுதிகளில் மீளக்குடியேறாது தொடர்ந்தும் அகதி முகாம்களிலும், நண்பர், உறவினர் வீடுகளிலும் தங்கியிருக்கும் அகதிகளுக்கு மார்ச் 31 ஆம் திகதி முதல் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட இருக்கின்றன.

குறிப்பிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேசச்செயலர்களுக்கும், அரசாங்க அதிபர்களுக்கும் இது தொடர்பான பணிப்புரையை புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சு அனுப்பி வைத்திருக்கிறது.

மேற்படி மாவட்டங்களில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## துணைவேந்தர் பதவிக்கு மூன்று பெயர்கள் சிபார்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் யார் என்பதை இன்னும் சில வாரங்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவிக்கவுள்ளது.

இப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டியவரைத் தெரிவு செய்வதற்கு வசதியாக மூவரது பெயர்ப்பட்டியல் ஒன்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

நேற்று மாலை யாழ். பல்கலைக் கழக பேரவையின் விசேட அமர்வு ஒன்று நடைபெற்றது.

இவ் அமர்வின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய மூவரது பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டது.

பேரவை அமர்வின் போது பிரேரிக்கப்பட்டதன் அடிப்படையில் இப்பட்டியல் தயாரிக்கப்பட்டது; தற்போதைய மருத்துவபீடாதிபதி பேராசிரியர் பாலசுப்பிரமணியம், கலைப்பீடாதிபதிபேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் குணரட்ணம் ஆகியோரது பெயர்களே பேரவை அமர்வின் போது பிரேரிக்கப்பட்டன.

(6ஆம் பக்கம் பார்க்க)

சிறிலங்கா கடற்படை

## தமிழக மீனவர் மீது மீண்டும் துப்பாக்கிச் சூடு

(சென்னை)

கச்சதீவு அருகில் நேற்று முன்தினம் மாலை மீண்டும் இந்திய மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒரு மீனவர் காயமடைந்தார்.

ஒரு வாரத்திற்கு முன்பும் இந்திய மீனவர் மீது சிறிலங்கா கடற்படை நடத்திய தாக்குதலில் இரு மீனவர்கள் பலியாகினர். இதைத்தொடர்ந்து இச்சம்பவம் தொடர்பாக இந்திய மாநிலங்களவையில் விவாதம் நடத்தப்பட்டதும் சிறிலங்கா அரசை இந்திய அரசு இது குறித்து எச்சரிக்க வேண்டும் என உறுப்பினர்கள் கோரிக்கைகள் எழுப்பியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பலாலி விமானத் தளத்தில்

## இறங்கும் விமானத்திற்கு உலங்குவானூர்திபாதுகாப்பு

(வடமராட்சி)

பலாலி விமான நிலையத்தில் இறங்கிச்செல்லும் விமானங்களுக்கு உலங்குவானூர்தி பாதுகாப்பு வழங்கி வருகிறது.

பலாலி விமான நிலையத்திற்கு விமானங்கள் வந்து இறங்குவதற்கு முன்னரும், விமான நிலையத்திலிருந்து மேலெ

## ஐ.தே.க. வேட்பாளரின் வீட்டிற்கு குண்டு வீச்சு

### தமிழ்க்குழு உறுப்பினர்கள் கைது

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சி வேட்பாளர் ஒருவரின் வீட்டிற்கு கிரனைற் வீசப்பட்டது. இது தொடர்பாக தமிழ்க் குழுவைச் சேர்ந்த இரு இளைஞர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்புமாநகரசபை தேர்தலில் போட்டியிடும் க. சுந்தரலிங்கம் (இந்திரன்) என்பவரின் கல்லடி வேலூரில் உள்ள வீட்டிற்கு கடந்த புதன்கிழமை இரவு 7-00 மணியளவில் கிரனைற் வீசப்பட்டது.

இச்சம்பவத்தில் குறிப்பிட்ட வேட்பாளரின் வீடு சிறிது சேதமடைந்தது.

அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா சம்பவதினம் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளால் விடுவிக்கப்பட்ட பொலிசாருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் விடுதலை செய்யப்பட்ட இரு சிறிலங்கா பொலிசாருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

ஒட்டிசுட்டான், மாங்குளம் பொலிஸ் நிலையங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய போது கைது செய்யப்பட்டு இருந்த இவர்கள் இம்மாதம் 24 ஆம் திகதி விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டனர்.

## சமாதானத்திற்கு ஒரு சமிக்கையாக நாம் விடுதலை செய்யப்பட்டோம்

## கச்சதீவு விவகாரத்தை கையாள்வது எப்படி?

### ஆராய சென்னையில் மாநாடு

இந்திய மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒரு மீனவர் காயமடைந்தார்.

ஒரு வாரத்திற்கு முன்பும் இந்திய மீனவர் மீது சிறிலங்கா கடற்படை நடத்திய தாக்குதலில் இரு மீனவர்கள் பலியாகினர். இதைத்தொடர்ந்து இச்சம்பவம் தொடர்பாக இந்திய மாநிலங்களவையில் விவாதம் நடத்தப்பட்டதும் சிறிலங்கா அரசை இந்திய அரசு இது குறித்து எச்சரிக்க வேண்டும் என உறுப்பினர்கள் கோரிக்கைகள் எழுப்பியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பலாலி விமானத் தளத்தில்

# இறங்கும் விமானத்திற்கு உலங்குவானூர்தி பாதுகாப்பு

(வடமராட்சி)

பலாலி விமான நிலையத்தில் இறங்கிச்செல்லும் விமானங்களுக்கு உலங்குவானூர்தி பாதுகாப்பு வழங்கி வருகிறது.

பலாலி விமான நிலையத்திற்கு விமானங்கள் வந்து இறங்குவதற்கு முன்னரும், விமானநிலையத்திலிருந்து மேலெழுந்து புறப்பட்டுச்செல்வதற்கு முன்னரும் உலங்குவானூர்தி வட்டமிட்டு பாதுகாப்பு பரிசோதிக்கப்பட்டபின்னரே விமானங்கள் இறங்கிச்செல்கின்றன. இப் புதிய நடவடிக்கை கடந்த சில தினங்களாகவே நடந்து வருகிறது குறிப்பிடத்தக்கது.

(யோ)

# வெளிநாட்டுத் திருமணம்; இப்படியும் ஒரு மோசடி

(கொழும்பு)

கனடாவிற்குச்சென்று திருமணம் செய்துகொள்வதாக சீதனம் பெற்றுக்கொண்ட தமிழ் இளைஞர் ஒருவர் கடந்த புதன்கிழமை வெள்ளவத்தை பொலிசாரினால் கொள்ளுப்பிட்டியில்வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட தமிழ் இளைஞர் கனடாவில் திருமணம் செய்துகொள்ளவிருக்கும் பெண்ணின் பெற்றோரிடமிருந்து சீதனப் பணத்தையும், இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் பெற்றுக்கொண்டு கனடாசென்று திருமணம் செய்துகொள்ளவிருந்தார். இவருடன் இவரின் பெற்றோரும் கூடச்செல்லவிருந்தனர்.

இவர் இன்னொரு பெண்ணுடன் திருமணமாகியிருந்த செய்தியை அறிந்து பெண்ணின் பெற்றோர் பொலிசில் புகார் தெரிவித்ததை அடுத்து கைதுசெய்யப்பட்டார்.

கைதான இளைஞர் தான் பெற்றிருந்த சீதனப் பணத்தையும், நகைகளையும் பெண்ணின் பெற்றோரிடம் மீள ஒப்படைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடும்ப பதிவு அட்டையில்

# சரியான விபரங்களை பதிவுசெய்துகொள்ளவும்

பொதுமக்கள் அனைவரும் தம்மிடம் உள்ள குடும்பப் பதிவு அட்டைகளில் குடும்பத்தலைவர் முழுப்பெயர், வதிவிட முகவரி, குடும்ப உறுப்பினர்கள் பெயர்கள், பிறந்த திகதி, தொழில், தொழில் இடம் என்பன சரியான, முழுமையான விபரங்களைக் கொண்டிருப்பதை எதிர்வரும் 24-3-94க்கு முன்னர் உறுதிப்படுத்துவதுடன் குடும்பத் தலைவரின் பெயர் முழுமையானதாக இருப்பதுடன் தற்போதைய வதிவிட முகவரி பூரணமாக பதியப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் குடும்ப உறுப்பினர்கள் அனைவரினதும் பெயர்கள் முழுமையானதாகவும், பிறந்த திகதி, தொழில், தொழில் புரியும் இடம் என்பன கண்டிப்பாக பதியப்பட்டிருத்தல் வேண்டும் என போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்பப்பதிவு அட்டை பகுதியினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இத்தகைய சரியான, முழுமையான விபரங்களைக் கொண்டிராத குடும்பப்பதிவு அட்டைகள் பாவனைக்கு ஏற்

(6ஆம் பக்கம் பார்க்க)

இதன் முதற் கட்ட நடவடிக்கையாகவே மார்ச் முதலாம் திகதி முதல் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை வெட்ட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனால் பல்லாயிரக் கணக்கான மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

அடுத்ததாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதகளில் மீளக்குடியேறாத அகதிகளின் நிவாரணத்தை நிறுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதுமார்ச் 31-ம்திகதி முதல் அமுலாகும் என்று புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, அம்பாறை, மன்னார் ஆகிய மாவட்டங்களில் சிறிலங்கா இராணுவத்தினரால் பாதுகாப்பான இடம் என பிரகடனப்படுத்தப்பட்டபகுதிகளில் மீளக்குடியேறாது தொடர்ந்தும் அகதி முகாம்களிலும், நண்பர், உறவினர் வீடுகளிலும் தங்கியிருக்கும் அகதிகளுக்கு மார்ச் 31 ஆம் திகதி முதல் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட இருக்கின்றன.

குறிப்பிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேசச்செயலர்களுக்கும், அரசாங்க அதிபர்களுக்கும் இது தொடர்பான பணிப்புரையை புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சு அனுப்பி வைத்திருக்கிறது.

மேற்படி மாவட்டங்களில்

(6ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்திற்கு ஒரு சமிக்ஞையாக நாம் விடுதலை செய்யப்பட்டோம்

## புலிகளால் விடுவிக்கப்பட்ட கைதி பி. பி. ஸிக்கு பேட்டி

(கொழும்பு)

எமது விடுதலையானது சமாதானத்திற்கான ஒரு சமிக்ஞையே என விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் யுத்தக் கைதிகளாக இருந்து சென்ற 24ஆம் திகதி விடுதலைசெய்யப்பட்ட சிறிலங்காபொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் லண்டன் பி. பி. ஸி. சிங்கள சேவையான சந்தேசியாவுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தற்போது நாரேன்பிட்டிய பொலிஸ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் திலகரட்ன பண்டார தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் சென்றமாதம் கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு மேற்றிராணியார் அதிவணக்கத்துக்குரிய நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ விடுதலைப்புலிகளின் தலைவருக்கு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து அவரின் வேண்டுகோளை ஏற்று அதற்குகௌரவம் மதிப்புகொடுக்கும் நோக்குடன் எமது விடுதலை அமைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

சிறைக்கைதிகளாக இருந்த எமது விடுதலை தொடர்பாக முன்னர் மேற்கொண்டமுயற்சிகள் எந்த காரணத்திற்காக நடைபெறாமல்போனது என கூறமுடியாது. நான் நினைக்கின்றேன் விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கு இடையேயான உள்ளார்ந்த நம்பிக்கையின்மை

(6ஆம் பக்கம் பார்க்க)

# வவுணதீவு ராணுவ முகாமில் தீ பெருமளவு துப்பாக்கிகள் நாசம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வவுணதீவு இராணுவ - பொலிஸ் முகாம்கள் தீப்பிடித்துக் கொண்டதால் பல துப்பாக்கிகளும் பெருமளவு துப்பாக்கி ரவைகளும்அழிந்தன. கடந்த செவ்வாய் இம்முகாம்களில் திடீரென தீப்பிடித்தது. இதன்போது உள்ளேயிருந்த பல ரி-56 துப்பாக்கிகளும் அவற்றிற்கான 1800 துப்பாக்கி ரவைகளும் முற்றாக நாசமாகின.

இத் தீவிபத்திற்கான காரணம் தெரியவரவில்லை முகாம்களில் தீப்பிடித்ததும் விமானப்படையின் தீயணைப்பு பிரிவினர் அப்பகுதிக்குவிரைந்தனர். எனினும் தீயைக் கட்டுப்படுத்தஇரண்டரை மணித்தியாலங்கள் பிடித்தன.

என்பவரின் கல்லடி வேலூ

(6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளால் விடுவிக்கப்பட்ட பொலிசாருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் விடுதலை செய்யப்பட்ட இரு சிறிலங்கா பொலிஸருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

ஒட்டிசுட்டான், மாங்குளம் பொலிஸ் நிலையங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய போது கைது செய்யப்பட்டு இருந்த இவர்கள் இம்மாதம் 24 ஆம் திகதி விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டனர்.

# கச்சதீவு விவகாரத்தை கையாள்வது எப்படி?

## ஆராய சென்னையில் மாநாடு

(சென்னை)

'பாக்கு நீரிணையில் இந்திய மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை' எனும் தலைப்பில் நேற்று முன் தினம் சென்னையில் மாநாடு ஒன்றுநடத்தப்பட்டது. இந்திய தமிழக மீனவர்களின் எதிர்கால நிலையை கருத்திற்கொள்ளாது கச்சதீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்துவிட்டதாக மாநாட்டில் பேசிய பலரும் கருத்து வெளியிட்டனர்.

ஏற்கனவே செய்யப்பட்ட ஒரு சர்வதேச ஒப்பந்தத்தை ரத்துச்செய்யமுடியாது என்பதால் கச்சதீவை ஒரு நெடுங்கால குத்தகைக்கு இந்தியா எடுத்துக்கொள்ள வழியுண்டா என்ற ஒருயோசனையும் மாநாட்டில் முன்வைக்கப்பட்டது. அல்லது ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விதியின் படி இலங்கை, இந்திய மீனவரின் மீன்பிடி உரிமையை மதித்து நடக்கவேண்டும் எனவும் அங்கு கூறப்பட்டது.

இம்மாநாடு நடைபெற்ற வேளை கச்சதீவு அருகே இந்திய மீனவர் ஒருவர்சிறிலங்கா கடற்படையின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தது குறிப்பிடத்தக்கது.

# கோமாரியில்வந்ததபால்கள் நாளை முதல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கோமாரி கப்பலில் ஏற்றி வரப்பட்ட தபால் பொதிகள் யாவும் இறக்கப்பட்டு யாழ். பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டன.

இவ்வாறுஎடுத்துவரப்பட்ட 403 தபால் பொதிகளும் இன்று தரம்பிரிக்கப்பட்டு நாளை விநியோகம் செய்யப்படும் என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நீண்ட காலமாக கொழும்பிலிருந்து எடுத்துவரப்படாமல் இருந்த உள்ளூர் பதிவுத் தபால் கட்டுக்களும் எடுத்து வரப்பட்ட தபால் பொதிகளில் அடங்கியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. இவை 628 கட்டுகள் என்று தெரிவிக்கப்பட்டது.

# அல்லிப்பளை - ஆலங்கேணிப் பகுதியில் அகோர விமானக் குண்டுவீச்சு; ஒருவர் பலி

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரு புக்காரா விமானங்களும், உலங்குவானூர்தி ஒன்றும் கிளாலி, அல்லிப்பளை, ஆலங்கேணி கடற்கரைப் பகுதிகளில் கடும் குண்டு வீச்சுத் தாக்குதலையும் ரொக்கற் தாக்குதலையும் நடத்தின. இத்தாக்குதலில் மருதனார்மடத்தைச் சேர்ந்த மாணிக்கம் செல்வநாயகம் கொல்லப்பட்டார்.

நேற்று இரவு 9.45 மணியளவில் ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து கிளாலி, அல்லிப்பளைப் பகுதிகளை நோக்கி கடும் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்ட சற்று நேரத்தின் பின்னர், அல்லிப்பளை இறங்குதுறைப் பகுதியை நோக்கி வந்த புக்காரா விமானங்கள் கரையோரங்களை நோக்கி கண்மூடித்தனமான றொக்கேட், குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின மேலும் கடலின் நடுப்பகுதியில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று சுலிபர்த்தாக்குதலை நடத்தி வருவதாகவும் ஆலங்கேணிப் பகுதியிலும் குண்டு வீச்சுத்தாக்குதல் இடம்பெறுறதாகவும்தெரியவருகின்றது.

இதேவேளை ஆலங்கேணிப் பகுதியில் இருந்து 10 ற்கும் மேற்பட்ட பயணிகள் படகு அல்லிப்பளை கரைக்கு வந்து சேர்ந்துள்ளது எனினும் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை மேலதிகவிபரம் கிடைக்கவில்லை. (86)

## வரி விளம்பரம்

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி உடன் வழங்கப்படும். இல: 288, நாவலர் வீதி, (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7547)

### மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். சகல மணிக்கூட்டு பற்றறிகளும், உதிரிப்பாகங்களும் எம்மிடம் உண்டு. கஜன்ஸ் வாச் வேக்ஸ், இல: 12 ஸ்ரேசன் வீதி, சந்திக்கருகாமையில் சுன்னாகம். (7601)

### விற்பனைக்குண்டு

ஒருமாத பிறவுண் பேட்டுக் கோழிக்குஞ்சு உடன் விற்பனைக்குண்டு: ஆஷா கோழிப் பண்ணை, ஓராம் கட்டை, பிரதான வீதி, பருத்தித் துறை. (7614)

### விற்பனைக்குண்டு

ஒரு ஒற்றைத்திருக்கலும், ஒரு டயர் வண்டிலும், இருவர் மிதிக்கும் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு 460, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (புனித யுவானியார் ஆலயத்திற்கு அருகில்). (7607)

### மணப்பெண் தேவை

பிரான்சில் நிரந்தர வேலை செய்யும் கத்தோலிக்கரான 38 வயது மணமகனுக்கு மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (7621)

### மூலிகைகள்

மூலிகைகள் நோய் வராது காக்கும், நோய் தீர்க்கும், உணவில் சேர்த்து உண்ணவும் கூடும். குடியிருக்கும் வளவுகளில் நட்டு வளர்க்க ஏற்ற மூலிகைகள் உள்ளன.


# ஸ்கந்தாவின் புகழை உயர்த்தியவர் அமரர் ஒறேற்றர் சுப்பிரமணியம்

## - உடுவில் பிரதேச செயலர் தெரிவிப்பு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நவீன சிற்பியும் புகழ்பூத்த முன்னாள் அதிபரும் சிறந்த கல்விமானும் ஈடு இணையற்ற ஆங்கிலப் பேச்சாளனுமாகிய 'ஒறேற்றர்' சி. சுப்பிரமணியம் அவர்களின் திடீர் மறைவு கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம். 18 ஆண்டுகளுக்கு மேலாக ஸ்கந்தாவின் அதிபர் பதவியை அலங்கரித்ததோடு கிராமப்புறப் பாடசாலையாக இருந்த ஸ்கந்தாவை அகில இலங்கை ரீதியில் அதி சிறப்புத் தரப் பாடசாலையாகவும், நூற்றுக்கணக்கான மாணவர்களை கலை, விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் துறைகளுக்குப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பும் கல்லூரியாகவும் மாற்றிய பெருமை அவருக்குரியது. விளையாட்டுத்துறையில் நகர்ப்புறப் பாடசாலைகளின் தரத்துக்கு ஸ்கந்தாவை உயர்த்தியதோடல்லாமல் சாதனைகள் படைக்கவும் அவர் வழிகாட்டினார். மேற்கண்டவாறு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் அவர்களின் மறைவு குறித்து வெளியிட்ட இரங்கல் அறிக்கையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவரும் வலிகாமம் தெற்குப் பிரதேசச் செயலாளருமான திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, அமரர் சி. சுப்பிரமணியம் அவர்கள் தனது ஆளுமையினாலும், ஆற்றலினாலும் பாடசாலைச் சமூகத்தை ஒன்றிணைத்து ஸ்கந்தா குடும்பம் ஒன்றை உருவாக்கினார். எளிமையும், தயாள குணமும் கொண்ட அன்னார் தமது காலத்தில் ஏழை மாணவர்களுக்குச் சலுகைகள் காட்டியதோடு அவர்களின் கல்வியில் அதிக அக்கறை காட்டினார். கல்வித் திணைக்கள விதிகளையும் மீறி வயதுகூடிய மாணவர்களைக் கல்லூரியில் சேர்த்துத் திக்கற்ற மாணவர்களுக்குப் புகலிடம் வழங்கினார். பின்தங்கிய வகுப்பு மாணவர்களைத் தனது பாடசாலைக்கு அனுமதித்து அந்தக் காலத்திலேயே பெரும் சமுதாயப் புரட்சிக்கு வித்திட்டார்.

## உதவி வழங்கல்

இடம்பெயர்ந்து முகாம்களுக்கு வெளியே வாழ்ந்து வரும் வறிய குடும்பங்களுக்கு ஜேர்மன் சமஷ்டிக்குடியரசின் உதவித் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள 275 வறிய குடும்பங்களுக்கும், சங்கானை உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள 225 வறிய குடும்பங்களுக்கும் பாய், படுக்கை விரிப்புக்கள் என்பனவற்றை வழங்கியுள்ளது.

## ஆடுகள் வழங்கல்

யாழ் பிரதேசச் செயலாளர் பிரிவின் கீழ் ஜனசக்தி கருத்திட்டத்தின் கீழ் ஜே/62 கொழும்புத்துறை மேற்கு கிராமசேவை அலுவலர் பகுதியில் மிகவறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் 15 நல்லின ஆடுகள் கொழும்புத்துறை மேற்குச் சனசமூக நிலையத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டது (24)


## இளங்கலைஞர் மன்றம் நன்றி நவிலல்

எமது மன்றம் எடுத்த 15 நாள் இசைவிழாவிற் கலந்துகொண்ட எல்லாக் கலைஞர்களுக்கும், நிகழ்ச்சிகளுக்குப் பேராதரவு நல்கிய வர்த்தகப் பெருமக்களுக்கும், பொருளுதவி மற்றும் சரீர உதவி செய்தோருக்கும், ஆசியுரை வழங்கிய அருளாளர்களுக்கும், மங்கள விளக்கேற்றியும் விருந்தினராகக் கலந்து கொண்டும் சிறப்பித்த பெரியோருக்கும், தியாகராஜ உற்சவத்தின்போது அன்னதானம் வழங்கிய வட. இலங்கைசர்வோதயத்தினருக்கும் திருப்பதி ஸ்ரோர்ஸுக்கும், ஒத்துழைப்பு வழங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும், கலைபண்பாட்டுக் கழகத்தினருக்கும் கலாமண்டபச் சூழலை அழகுபடுத்திய வட. இலங்கை சர்வோதயத் தொண்டர்களுக்கும், யாழ். மாநகர சபையினருக்கும் நிகழ்ச்சி நிரலை அழகுற அச்சிட்ட கண்ணன் அச்சகத்துக்கும், ஒளி அமைப்புச் செய்த மனோ லைற் நிறுவனத்திற்கும், ஒலி அமைப்பைஉதவியநித்தி-றஸ்மி ஸ்தாபனத்தினருக்கும், விளம்பரங்களை உபகரித்த வணிகத்துறையினருக்கும், வெளியிட்ட நாளிதழ்களுக்கும் பெருந்திரளாகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்த ரசிகப்பெருமக்களுக்கும், ஒழுங்குகளைக் கண்காணித்த காவல்துறையினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பு:- பெருந்தொகையான இளங் கலைஞர்கள் விண்ணப்பித்திருந்தும் எல்லோருக்கும் நிகழ்ச்சியில் இடமளிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். இனிவரும் மாதாந்த நிகழ்ச்சிகளில் அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

பொன். சுந்தரலிங்கம்
தலைவர்

(சி-8718)


## இன்றைய நிகழ்வுகள்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி புலமைப் பரிசுபெற்ற மாணவர்களைப் பாராட்டி பரிசு வழங்கும் பாராட்டு விழா இன்று திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் விழாவுக்கான ஏற்பாடுகளை நல்லூர் பல நோக்கு கூட்டுறவு சங்கம் செய்துள்ளது.

ஃ ஃ

தேசிய கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் நந்தினி சேவியரின் ''அயல் கிராமத்தை சேர்ந்தவர்கள்' சிதம்பரதிருச்செந்திநாதனின் ''வெட்டு முகம்'' மற்றும் குன்றத்துக் குமுறல் ஆகிய நூல்களின் மதிப்பீட்டு அரங்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் இன்று பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

யாழ். மெய்கண்ட தேவர் ஆதீனத்தின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் குருபூசை நினைவு விழா இன்று காலை ஒன்பது மணியளவில் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து திருமாளிகைத் தேவர் நினைவுப் பேருரையும் இடம்பெறும்.

ஃ ஃ

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில்

வடஇலங்கை ஹோமியோபதி சங்கத்தின் முப்பத்தைந்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டம்இன்றுஞாயிறு காலை ஒன்பது மணியளவில் நாவலர் வீதி 35-ம் இலக்கமனையில் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது

ஃ ஃ

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் அ. துரைராசா அவர்களின் சேவை நலன்களை பாராட்டுவதற்கான விழா இன்று பிற்பகல் 4,30 மணியளவில் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியில் நடைபெறவுள்ளது இவ் வைபவத்திற்கு இக் கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்லத்துரை தலைமை வகிப்பார்

ஃ ஃ

கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டமும் செயற்குழுத்தெரிவும் இன்று 27-ஆந் திகதி காலை 9-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அருட்திரு சகாயநாதன் அறிவித்துள்ளார்.

ஃ ஃ

வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி. ப. 1-00 மணியளவில் வித்தியாலய அதிபர் திரு. எஸ். சந்திரசே


# நங்கூரம்

தரும்

அன்புப் பரிசு

மாசி மாத இதழுடன்

தாமதித்தால் தவிக்க நேரிடலாம்

குடாநாட்டின் சகல புத்தகசாலைகளிலும்.

(இ/8726)

# ★ கண்ணீர் அஞ்சலி ★

யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரியின்

முன்னாள் அதிபர்

ஒறேற்றர்

சி. சுப்பிரமணியம் அவர்கள்

18 - 02 - 1994 அன்று இலண்டனில்

சிவபதமடைந்தார்

சந்தனத் தமிழ் போற்றிச் சாற்றிய ஆங்கிலமும்
வந்தனத் தாலேனும் வளர்கிசனே - ஸ்கந்த
வரோதயப் புகழ் ஒறேற்றர் சுப்பிரமண்யா - நீ
சிரோன் மணி யாயெங்கு சென்றனையோ?

ஓயாக் கரங்கள் ஓய்ந்தனவோ? நிலை
சாயாத தாள்களும் சாய்ந்தனவோ? தாய்போல்
உறங்கா விழியும் உறங்கினவோ? ஐயோ!
அறங்காப்பார் இனி யாருளரோ?

இதயம் பொறுக்கவில்லை, இங்கிருக்க முடியவில்லை,
ஸ்கந்தாவே தடுமாறுது, எம்நிலை யார்புரிவார்?
பதைத்திடும் நெஞ்சம் உம்மைப் பார்க்கவேமுடியவில்லை
பசுமையை இங்கு தந்து பயணம் புரிந்தனையோ?

அழுதிடும் குரல்கள் கேட்கலையோ? இந்த
ஆண்டவன் முன்னால் நின்று அழுகின்றோம்
பழுதிலா நின்சேவை படிக்கின்றோம் - இந்தப்
பாரே விம்மி விம்மி அழுகின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது இதய அஞ்சலிகள்.

பிரிவால் துயருறும் இதயங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

கந்தரோடை, சுன்னாகம்.
27. 02. 1994

ஆசிரியர் கழகம்.
யா-ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

(7626)

# நினைவு கூருகின்றோம்..

ஆயத்தமாகு இருக்கல்). (7607)

## மணப்பெண் தேவை

பிராங்கில் நிரந்தர வேலை செய்யும் கத்தோலிக்கரான 38 வயது மணமகனுக்கு மணப்பெண் தேவை: மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (7621)

## மூலிகைகள்

மூலிகைகள் நோய் வராது காக்கும், நோய் தீர்க்கும், உணவில் சேர்த்து உண்ணவும் கூடும். குடியிருக்கும் வளவுகளில் நட்டு வளர்க்க ஏற்ற மூலிகைகள் உள்ளன: மில்க்வைற் நீலசோப் மேலுறை|சவைத்தூள் வெற்றுப் பைக்கற் இருபத்தைந்து அல்லது பணம் ரூபா 10/- தந்து கன்று ஒன்று பெறவும்: 'மில்க்வைற்'' (8717)

## திருமண சேவை

பொருத்தமான மணமகன்| மணமகள் எம்மிடம் உண்டு: தொடர்பு; மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (7622)

## புராணநாடகம்

இணுவில் மத்தியகல்லூரி அபிவிருத்தி நிதிக்காக பழைய மாணவர் ஆதரவில் இளந்தொண்டர் சபையினர் வழங்கும் ''வள்ளி திருமணம்'' புராண நாடகம் எதிர்வரும் 13 திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6. 30 மணிக்கு கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது,

## தொற்றுநோய் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தொற்றுநோய்களின் ஆதிக்கம் குறைந்தபாடாய் இல்லையென தெரியவருகின்றது: குடியிருப்பைச் சேர்ந்த மக்களில் அனேகர் தொற்றுநோய்களினால் பீடிக்கப்பட்டே உள்ளனர். இதில் அண்மையில் தொற்றுநோய்களினால் உயிரிழந்த சிறார்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே அதிகமாக மேற்படி நோய்களினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

தொற்று நோயினால் ஐந்து சிறார்களும், வயோதிபப் பெண் ஒருவரும் அண்மையில் உயிரிழந்தமை தெரிந்ததே: (82)

---

ங்கை சர்வோதயத் தொண்டர்களுக்கும், யாழ். மாநகர சபையினருக்கும் நிகழ்ச்சி நிரலை அழகுற அச்சிட்ட கண்ணன் அச்சகத்துக்கும், ஒளி அமைப்புச் செய்த மனோ கலர் நிறுவனத்திற்கும், ஒலி அமைப்பைஉதவியநித்தி-றஸிமி ஸ்தாபனத்தினருக்கும், விளம்பரங்களை உபகரித்த வணிகத்துறையினருக்கும், வெளியிட்ட நாளிதழ்களுக்கும் பெருந்திரளாகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்த ரசிகப்பெருமக்களுக்கும், ஒழுங்குகளைக் கண்காணித்த காவல்துறையினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பு:- பெருந்தொகையான இளங்கலைஞர்கள் விண்ணப்பித்திருந்தும் எல்லோருக்கும் நிகழ்ச்சியில் இடமளிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். இனிவரும் மாதாந்த நிகழ்ச்சிகளில் அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

பொன். சுந்தரலிங்கம்
தலைவர்

(சி-8718)

---

## நிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளது

யா|சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் தென்மராட்சிக் கோட்ட மகளிர் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் நடாத்தவிருந்த ''மாபெரும் கலைவிழா'' (27-02-1994) தற்பொழுது பிற்போடப்பட்டு பின்னர் 24-03-1994 அன்று நடைபெறவுள்ளது என்பதை அனைத்து ரசிகப் பெருமக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

நிகழ்ச்சி:- தமிழீழ இசைக்குழுவின் இசைத் தென்றல், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு (நாட்டிய நாடகம்), 'மண்ணில் மைந்தர்கள் (நாடகம்)

நன்றி

**மகளிர் கலை பண்பாட்டுக் கழகம்**
நடுவப் பணியகம்,
தமிழீழம். (7615)

---

## மக்கள் வங்கி

எழுதுவினைஞர் தெரிவுக்கான

**போட்டிப் பரீட்சை**

1 மாத கால

**துரித பயிற்சி வகுப்புகள்**

திங்கள், புதன், வெள்ளி தினங்களில்
3 00 - 5-30

ஆரம்பம்: 28 - 02 - 1994
3-00 மணி

பாடங்கள்:
நுண்ணறிவு, பொது அறிவு, தமிழ்மொழி
முழுக்கட்டணம் 200/-

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3RD CROSS STREET,
JAFFNA. (சி-8719)

---

சிதம்பரதிருச்செந்திநாதனின் ''வெட்டு முகம்'' மற்றும் குன்றத்துக் குமுறல் ஆகிய நூல்களின் மதிப்பீட்டு அரங்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் இன்று பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறவுள்ளது:

ஃ ஃ

யாழ். மெய்கண்ட தேவர் ஆதீனத்தின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் குருபூசை நினைவு விழா இன்று காலை ஒன்பது மணியளவில் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து திருமாளிகைத் தேவர் நினைவுப் பேருரையும் இடம்பெறும்.

ஃ ஃ

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஓய்வுபெற்றார் சி. சுப்பிரமணியம் அவர்கள் அஞ்சலிக் கூட்டம் இன்று காலை ஒன்பது மணியளவில் நடைபெறவுள்ளது:

ஃ ஃ

வலிகிழக்கு உதைபந்தாட்ட சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்றுகாலை பத்து முப்பது மணியளவில் சென் பற்றிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

நல்லை ஆதீன மண்டபத்தில் இன்று பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் ''பஞ்சாங்க கணிப்பு முறைமை - ஓர் ஆய்வு'' என்னும் தலைப்பகத்தில் காம்பனூர் இ. சுந்தையா உரை நிகழ்த்தவிருக்கிறார். இந்நிகழ்ச்சியில் கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமை தாங்கவுள்ளார்.

ஃ ஃ

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபையின் வருடாந்த பொதுக்கூட்டம்இன்றுகாலை பத்து மணியளவில் யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது

வத்திற்கு இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்லத்துரை தலைமை வகிப்பார்

ஃ ஃ

கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டமும் செயற்குழுத்தெரிவும் இன்று 27-ஆந் திகதி காலை 9-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அருட்திரு சகாயநாதன் அறிவித்துள்ளார்:

ஃ ஃ

வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி. ப. 1-00 மணியளவில் வித்தியாலய அதிபர் திரு: எஸ். சந்திரசேகரம் அவர்கள் தலைமையில் நடைபெறும்

சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு: அ. தற்பரானந்தம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார்.

ஃ ஃ

யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயப் புதிய அதிபர் திரு: கி. ஆ: சோதிலிங்கத்துக்கு வரவேற்பு உபசாரமும், இடமாற்றலாகிச் சென்ற அதிபர் திரு வி. மாணிக்கத்துக்கு பிரிவுபசாரமும் இன்று 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் உப-அதிபர் திருமதி த. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும்;

ஃ ஃ

(கொழும்புத்துறை)

பாலர் கல்விக் கழகத்தின் 28ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். நீராவியடி கல்லூரிவீதி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம் பெறும்.

## அறுவடையின் பின் தானியப் பயிர் செய்கை

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசங்களில் அமைந்துள்ள நெற்காணிகளில் அறுவடை முடிந்த நிலையில் அவற்றில் எள்ளு, கௌபி, பயறு, சணல் போன்ற தானியவகைகளை விவசாயிகள் விதைத்து வருகின்றனர்: விவசாயிகள் இவற்றின் உற்பத்தியில் அதிக ஆர்வத்துடன் உழைப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது;

மேலும் தண்ணீர் வசதிகளை பெறக்கூடிய வயற்காணிகளில் உப உணவுப் பயிர்ச்செய்கைகள் குறிப்பாக மிளகாய், கத்தரி, வெண்டி, புடோல், பயற்றங்காய் போன்ற காய்கறி வகைகளின் பயிர்ச்செய்கையும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது; (07)

---

பசுமையை இங்கு தந்து பயணம் புரிந்தனையோ?

அழுதிடும் குரல்கள் கேட்கலையோ? இந்த ஆண்டவன் முன்னால் நின்று அழுகின்றோம் பழுதிலா நின்சேவை படிக்கின்றோம் - இந்தப் பாரே விம்மி விம்மி அழுகின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது இதய அஞ்சலிகள்.

பிரிவால் துயருறும் இதயங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

கந்தரோடை, சுன்னாகம், 27. 02. 1994 (7626)

**ஆசிரியர் கழகம்.**
யா-ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

---

## நினைவு கூருகின்றோம்..

## 1994. 02. 27

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ். தாவடிப் பகுதியில் எமது தும்புத் தொழிற்சாலை ஒன்றின் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**லூக்காஸ்** (-நீக்கலாஸ் நாவலப்பிட்டி மலையகம்)

இதேபகுதி மற்றும் சுதுமலை, கோண்டாவில், சுருவில் பகுதிகளில் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட விமானம், உலங்குவானூர்தித் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1991ம்ஆண்டு மட்டு - தளவாய் பன்குடாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்ய முயன்ற போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**கேதீஸ்** (-களுவாஞ்சிக்குடி - மட்டு)

1992 ஆம் ஆண்டு மட்டு - வாழைச்சேனை காகித ஆலை முகாமிலிருந்து கிராமங்களைச் சுற்றிவளைக்கும் நோக்குடன் வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது பெண்டுகள் சேனைப்பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய

**கப்டன் தாஸன்** (தம்பிப்போடி விஜேந்திரன் ஏறாவூர் - மட்டு)

1993 ஆம் ஆண்டு அம்பாறை - தங்கபுரம் பகுதியிற் சிறிலங்காச் சிறப்பு அதிரடிப்படையினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி

**மேஜர் ராஜேஸ்** (செல்வராசா குவேந்திரராஜா திருக்கோவில் - அம்பாறை)

மட்டு திகிளிவெட்டைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப். முரளீதரன்** (கிருஷ்ணபிள்ளை கமலநாதன் - தம்பிலுவில் - அம்பாறை)

**கவிஞர்** (கணபதிப்பிள்ளை முருகமூர்த்தி சேனைக்குடியிருப்பு, கல்முனை - அம்பாறை)

மட்டு திகிளிவெட்டைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவம் மற்றும் தேசவிரோதிகளும் நடத்திய வெறியாட்டத்தில் பலியான 06 பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8716)

### சீருடை வழங்க தீவிர முயற்சி

பிரதம தபாற் கந்தோர் ஊழியர்களுக்கு பல ஆண்டுகளின் பின்னர் இந்த ஆண்டு சீருடை வழங்குவதற்கு பிரதம தபால் கந்தோர் உயர் அதிகாரி தீவிர முயற்சி எடுத்துள்ளார்.

இதன்படி தபாற்கந்தோர் ஊழியர்களுக்கு ஏப்பிரல் மாதத்திற்கு முன்னதாக இச் சீருடை கிடைக்கப் பெறும் எனத் தெரியவருகிறது. இதேவேளை கடந்த சில வருடங்களாக இவர்களுக்கு சீருடை பெற்றுதருவது தொடர்பாக வட பிராந்திய தபால் அத்தியட்சகர் பிரிவினர் அசட்டை காட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

### நெற்செய்கை ஊக்குவிப்பு

முல்லைத் தீவு மாவட்டத்தில் நெடுங்கேணி வட்டத்தில் காலபோக நெற்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல வேறு வழிமுறைகளை மேற்கொண்டு வருகின்றது.

வடக்கு-கிழக்கில்

# யுத்தத்தை முழுமையாக நடத்தி வெற்றி கொள்ள வேண்டும்

**- புதிய விமானப்படைத்தளபதி**

(கொழும்பு)

பேச்சு வார்த்தை மூலமாக வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு தீர்வு காணமுடியாது. அண்மைக் கால சம்பவங்கள் இதனை விளக்குகின்றன. முழுமையானயுத்தத்தை நடாத்தி நாம் வெற்றி கொள்ள வேண்டும்.

இவ்வாறு, புதிய விமானப் படைத் தளபதி ஏயர்மார்ஷல் ஒலிவர் ரணசிங்க தெரிவித்துள்ளார். தமது பதவி ஏற்ற பின்னர் கண்டி மல்வத்த அஸ்கிரிய தொடாவுடியமாநாயக தேரோக்களைச் சந்தித்து ஆசிபெறச் சென்ற போது, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கும்போது வடக்கு-கிழக்கு நிலைமையை நோக்கும் போது, இது மிகவும் பாரிய பொறுப்பு. தற்போது, முப்படையினரும் பொலிசாரும் ஒன்றிணைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இப் பிரச்சினை தொடர்வதை தொடர்ந்து அனுமதிக்க முடியாது, இதனால் எமக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்தப் பத்து வருட யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட வேண்டும் இதற்காக தம்மை அர்ப்பணம் செய்துள்ள படைத் தளபதிகள், முழுமையான ஊக்கத்துடன் செயலாற்ற வேண்டும்.

இராணுவத்தினர் சென்ற காலங்களில் அவ்வளவான பொறுப்புக்களை ஏற்றுச் செயற்பட்டதாகத் தெரியவில்லை. இதனாலேயே இன்று இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பேச்சு வார்த்தை அவசியமானால் ஆயுதங்களை கீழே வைத்து, சமாதானத்திற்கான ஒத்துழைப்பை விடுதலைப் புலிகள் நல்க வேண்டும். சிங்கள மக்கள், சிங்களப் படையினர் இந்தயுத்தத்தினால் தமது உயிர்களை அர்ப்பணித்துள்ளனர். இதனை நாம் மறந்து செயற்படக் கூடாது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் கணிசமான பங்களிப்பு விமானப்படையினருக்கு உண்டு. அதனை செயற்படுத்த நான் பின்நிற்கப் போவதில்லை எனக் குறிப்பிட்டார்.

# திட்டமிட்டு செயற்படும் கட்சிக்கு வாக்களியுங்கள்

**காமினி திசாநாயக்கா**

நாட்டை ஆட்சி செய்வதாயின் நாட்டுப் பற்று தேவைப்படும், நாட்டின் எதிர்காலம் தொடர்பாக திட்டமிட்டு செயல்பட வேண்டும். இவ்வாறான கட்சிகளுக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும் என தென் மாகாணசபை தேர்தல் பிரசாரத்தின்போது பலப்பிட்டியா தொகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளரை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி கருத்தை தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் வடக்கு கிழக்கு யுத்தத்தினால் செலவு 25 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது. ஒரு கஷ்டப்பட்ட நாடு எப்படி இந்த யுத்த செலவை சுமக்க முடியும்? இதற்கு பணத்தை எவ்வாறு பெற்று கொள்ள முடியும். போக்குவரத்து வீதிகள் அமைப்பது, மருத்துவ சுகாதார வசதி பெறுதல் பாடசாலை குறைபாடுகள் புலமை பரிசுகளை பெற்று கொள்ளுதல் போன்றவற்றிற்கு நாடு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்றார்.

பூநகரி தாக்குதலின் ஒரே நாள்இரவில் 1200 மட்டில் இறந்து போனார்கள், மணலாற்றில் 100க்கு மேற்பட்டவர்கள் இறந்துள்ளார்கள்,

எமது நாடு இன்று உற்சவங்களிலும், களியாட்டங்களிலும் இருந்து விடுதலை பெற்று இந்த துன்ப சம்பவங்களுக்கு முகம் கொடுக்க வேண்டும். இதற்காக எனது எதிர் கால நடவடிக்கையில் அர்ப்பணிக்க நான் தயாராக இருப்பதாக ஜனாதிபதிக்கு தெரிவித்தேன்.

இந்த நாடு புண்ணிய உலகம் அல்ல இனவாதத்தினால் பிளவு பட்டுள்ளது. இதனை ஒற்றுமையான நாடாகவைத்திருக்க ஐக்கிய தேசிய கட்சியினாலேயேமுடியும் என்பதை சகலரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

### சவுக்கு மரம் நடு திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் சவுக்கு மரம் நடும் திட்டமொன்றை ''ஊற்று'' என்ற நிறுவனம் மேற்கொள்ள உள்ளது. சவுக்கு மரம் நடும் மேற்படி திட்டத்துக்கு சுமார் எட்டு லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச்சபை உதவி வழங்க முன்வந்துள்ளது. இதற்கான நிதி உதவி அடுத்தமாதம் மேற்படி நிறுவனத்துக்கு கிடைத்துவிடும் அதைத்தொடர்ந்து மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது. (ஈ)

# விடுதி வசதி செய்யப்படாவிடில் போராட்டம் தொடர்ந்து நடக்கும்

**- பேராதனை பல்கலை மாணவர்**

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான விடுதி வசதிகள் செய்து கொடுக்காமல் அரசாங்கமும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் செயல்படுவதாகவும் இதனை கண்டித்து பேராதனிய பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

1990ஆம் ஆண்டு பேராதனிய பல்கலைக்கழக விடுதி அமைப்புக்கு என ஒதுக்கிய அறுபது லட்சம் ரூபாவுக்கு என்ன நடந்தது என பல்கலைக்கழக மாணவர் குரல் எழுப்பியுள்ளனர். இருப்பிட வசதி செய்து தராவிட்டால் தாம் தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை என மாணவர் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் தாம் வெளியே விடுதி வசதிகளை பெறுவதற்காக பல கஷ்டங்களை எதிர் கொள்வதாக சுட்டிக்காட்டியதை தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர் சகலருக்கும் விடுதி வசதி வழங்கப்படும் என ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான நிரந்தர கட்டடம் பெறும்வரை தனியார் கட்டடங்களை வாடகைக்கு எடுத்து தரப்படும் என முன்னர் உறுதி வழங்கியமையை நினைவுபடுத்தினார்கள்.

தமது நியாயமான போராட்டத்திற்கு இதுவரை அதிகாரிகள் எந்தவொரு திட்டத்தையும் முன் வைக்காமை கவலை தரும் ஒரு விடயம் என பல்கலைக்கழக மாணவ சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

### அன்பளிப்பு

மகளிர் அபிவிருத்தி நிலையம் கொழும்புத்துறை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்கட்கு உதவும் வகையில் 100 அப்பியாசக் கொப்பிகளை வழங்கியுள்ளது.

# புத்தகங்களுக்கு உறைபோடவும் கிழக்கு மாணவருக்கு தடை விதிப்பு

(மட்டக்களப்பு)

''பாடசாலை மாணவர்கள் தமது புத்தகங்களுக்கு உறைகள் எதையும் போட்டுக் கொள்ளக்கூடாது'', ''மாணவர்கள் புத்தகப்பைகள் எதையும் பாடசாலைக்கு கொண்டு செல்லக் கூடாது'' இவைகள் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கூறும் அறிவுரைகள் அல்ல. மட்டக்களப்பில் உள்ள சில பாடசாலை ஆசிரியர்களுக்கு சிறிலங்கா இராணுவத்தினர் விதிக்கும் கட்டளைகள்தான் இவை. இவற்றுடன் மாணவர்கள் தினசரி ஒரே பாதையிலேயே செல்ல வேண்டும் என்ற மற்றுமொரு கட்டளையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலை ஆசிரியர்களை தமது முகாம்களுக்கு அழைத்துச் சென்று மேற்படி கட்டளைகளை இராணுவத்தினர் இட்டதாக மட்டக்களப்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மேய்ப்புப்பணி மகாநாடு

யாழ். மேய்ப்புப்பணி மகாநாடு மார்ச் மாதம் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3-30 மணிக்கு யாழ். ஆயர் பேரருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் புனித பத்திரிசியார் கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் ஆரம்பமாக உள்ளது. நான்கு நாட்கள் தொடர்ந்து நடைபெற உள்ள இம் மகாநாட்டில் யாழ். ஆயர், மன்னார் ஆயர் மற்றும் 80க்கும் மேற்பட்ட குருக்கள் துறவியர் இம்மகாநாட்டில் கலந்துகொள்ள உள்ளார்கள், யாழ். திருச்சபையின் வரலாற்றில் இப்படியானதோர் மகாநாடு நடைபெற உள்ளது இதுவே முதல் நடவடிக்கையென்பதும் தற்போது இலங்கையில் நடைபெறும் போரின் மத்தியிலும் இம் மகாநாடு நடைபெற உள்ளதாகவும் யாழ். மறை வட்ட பங்

# 31-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணுறவு:
23 - 01 - 1920

விண்ணுறவு:
28 - 01 - 1994



## அமரர் சி. க. தங்கத்துரை

(ஓய்வுபெற்ற கணித, தொழில்நுட்ப-சித்திர, விரிவுரையாளர்

அன்பாலும் பண்பாலும் ஆதரித்த தெய்வமே
கண்பாயும் நீர்கொண்டு அஞ்சலித்து நிற்கின்றோம்
தூக்கி வளர்த்தவரே துணைகெட்டுத் தேம்புகிறோம்
உங்கள் ஆன்ம சாந்திகு வேண்டுகின்றோம்.

அமரரின் அந்தியேட்டி (27-02-94) இன்று நடைபெறும். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

த. தேவகுமார்
புலோலி தெற்கு,
புலோலி.

மனைவி, மக்கள்
மருமக்கள்.

(7623)

### அமெரிக்க புலனாய்வு உதவி சிறிலங்கா கோரியுள்ளது

### பசன் கன்றுகள் முற்றிலும் இலவசம்

மண்ணில் மறைந்த எங்கள் அருமைத் தந்தையின்

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

1990ஆம் ஆண்டு பேராதனிய பல்கலைக்கழக விடுதி அமைப்புக்கு என ஒதுக்கிய அறுபது லட்சம் ரூபாவுக்கு என்ன நடந்தது என பல்கலைக்கழக மாணவர் குரல் எழுப்பியுள்ளனர். இருப்பிட வசதி செய்து தராவிட்டால் தாம் தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை என மாணவர் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் தாம் வெளியே விடுதி வசதிகளை பெறுவதற்காக பல கஷ்டங்களை எதிர் கொள்வதாக சுட்டிக்காட்டி

# புத்தகங்களுக்கு உறைபோடவும் கிழக்கு மாணவருக்கு தடை விதிப்பு

(மட்டக்களப்பு)

''பாடசாலை மாணவர்கள் தமது புத்தகங்களுக்கு உறைகள் எதையும் போட்டுக் கொள்ளக்கூடாது'', ''மாணவர்கள் புத்தகப்பைகள் எதையும் பாடசாலைக்கு கொண்டு செல்லக் கூடாது'' இவைகள் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கூறும் அறிவுரைகள் அல்ல. மட்டக்களப்பில் உள்ள சில பாடசாலை ஆசிரியர்களுக்கு சிறிலங்கா இராணுவத்தினர் விதிக்கும் கட்டளைகள்தான் இவை. இவற்றுடன் மாணவர்கள் தினசரி ஒரே பாதையிலேயே செல்ல வேண்டும் என்ற மற்றுமொரு கட்டளையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலை ஆசிரியர்களை தமது முகாம்களுக்கு அழைத்துச் சென்று மேற்படி கட்டளைகளை இராணுவத்தினர் இட்டதாக மட்டக்களப்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். மேய்ப்புப்பணி மகாநாடு மார்ச் மாதம் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப 3-30 மணிக்கு யாழ். ஆயர் பேரருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் புனித பத்திரிசியார் கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் ஆரம்பமாக உள்ளது. நான்கு நாட்கள் தொடர்ந்து நடைபெற உள்ள இம் மகாநாட்டில் யாழ். ஆயர், மன்னார் ஆயர் மற்றும் 80க்கும் மேற்பட்ட குருக்கள் துறவியர் இம்மகாநாட்டில் கலந்துகொள்ள உள்ளார்கள், யாழ். திருச்சபையின் வரலாற்றில் இப்படியானதோர் மகாநாடு நடைபெற உள்ளது இதுவே முதல் நடவடிக்கையென்பதும் தற்போது இலங்கையில் நடைபெறும் போரின் மத்தியிலும் இம் மகாநாடு நடைபெற உள்ளதாகவும் யாழ். மறை வட்ட பங்குக் குருவர்கள் அனைவரும், பிரதிநிதிகளும் கலந்து கொள்ள உள்ளார்கள் எனவும் யாழ். பேராலய பொதுச் செயலர் அருட்திரு ஜே. நிக்கலஸ் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க புலனாய்வு உதவி சிறிலங்கா கோரியுள்ளது

சிறிலங்கா ஜனாதிபதியினதும் பிரதமரினதும் பாதுகாப்பிற்கு அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் உதவி கோரப்பட்டுள்ளது, சிறிலங்கா புலனாய்வுப்பிரிவினரிடமும்படையினரிடமும் அரசிற்கு ஏற்பட்ட அவநம்பிக்கையே இம் முடிவுக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.


## பசன் கன்றுகள் முற்றிலும் இலவசம்

(Passion Fruit Plants)

ஜாம் மூடியுடன் 400g ஹொர்லிக்ஸ், வீவா போத்தல்களில் ஏதாவது ஐந்து (5) எம்மிடம் ஒப்படைக்கும் போது போத்தலுக்குரிய பணத்தைப் பெறுவதுடன் பசன் கன்று ஒன்றை முற்றிலும் இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள். இச் சலுகை கன்றுகள் உள்ள வரை மட்டுமே.

TASTE LINE INDUSTRIES (PVT) LTD.
NO. 14, சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம்.

குறிப்பு:- பசன் பழங்கள் நாம் கொள்வனவு செய்கின்றோம்.

(சி-8700)


நல்லூர் ப. நோ. கூ. சங்க எல்லைப் பரப்பில் உள்ள பாடசாலைகளில் கற்று 1993 இல் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவ மாணவியரைப் பாராட்டி, வாழ்த்திப் பரிசில் வழங்கும்

## பாராட்டு விழா

**இடம்: திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபம்.**

**காலம்: 27-02-1994 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2.30 மணி.**

இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு பரிசில் பெறும் மாணவ மாணவியரின் பெற்றோர்களையும், அவர்தம் ஆசிரியர்களையும், அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் வேண்டுகிறோம்.

நெறியாளர் குழு
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.
திருநெல்வேலி.

(சி-8714)

பிற மதத்தவர்களுடன்

# சிநேகபூர்வ புரிந்துணர்வுக்கு திருச்சபை மக்கள் மயமாக வேண்டும்

**- குருமுதல்வர் அருட்திரு எஸ். ஜே. இம்மனுவல்**

''இன்றைக்குத் தமிழ் சமூகம் அனுபவிக்கும் கஷ்ட துன்பங்களின் காரணமாக முன்னொரு பொழுதும் இல்லாத விதமாகத் திருச்சபை மக்கள் மயமாக்கப்பட வேண்டும். தவிர, முழுதான மனித நேயத்தைப் பூர்த்தி செய்வதுடன், பிற மதங்களுடன் சிநேக பூர்வமாகவும், புரிந்துணர்வுடன் அமைதல் அவசியம். திருச்சபைக்கு உள்ளும், புறமும் மறுமலர்ச்சியும் மாற்றமும் உண்டாக வேண்டும்'' இவ்வாறு குருமுதல்வர் வண. எஸ். ஜே. இம்மனுவல் தெரிவித்தார்.

''சிறிது காலத்துக்கு முதல் திருச்சபை சுய குழும்மாக ஞான போதனைகளில் ஈடுபட்டது. 1962 இல் இருபத்திமூன்றாவது அருளப்பர் பாப்பரசரான பிறகு, திருச்சபையின் கண்ணோட்டம் மற்றும் அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டது. உலகத்துக்கும் திருச்சபைக்கும் உள்ள தொடர்புகள், உறவுகளில் திருப்பங்கள் ஏற்பட்டன. அவர் திருச்சபையின் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்துவிட்டார். புதிய காற்று. புதிய வெளிச்சம் திருச்சபையினுள் வீசியது. உலகம் திருச்சபையை அறிந்தது. திருச்சபை உலகத்தை அறிந்தது திருச்சபைக்குள் ஏற்பட்ட இந்தக் 'கொப்பனிக்கர்ஸ் மாற்றம்' மக்களை மையமாகக் கொண்டு கிறிஸ்துவின் செய்தியையும், விடுதலையையும், அவர் ஆரம்பித்த இறையரசையும்மெய்யான அனைத்துக்கும் சமூக, பொருளாதார அரசியல் கலாசாரத்துக்கு ஊட்ட வேண்டும். ஆதலினால் அவைகளைப் புதுப்பிக்கவேண்டும். இந்த நூற்றாண்டில் திருச்சபை ஒரு மூடப்பட்ட சமூகமாக இல்லை. உலகின் தேவைகள், பிரச்சினைகள் அனைத்துக்கும் செவிமடுத்து இரட்சணிய பணிபுரியும் நிறுவனமாகச் செயல்புரிகிறது.

''இந்த மாற்றங்கள் எமது நாட்டிலும் ஏற்பட்டன. தமிழில் வழிபாடு மக்களோடு இணைந்து போகக் கூடியதாக வகையில் வழிபாட்டு முறையில் மாற்றங்கள் மக்களுடைய தேவைக்கு ஏற்ப சமூக சேவை கலை கலாசார வளர்ச்சியிலே கூடிய ஈடுபாடு ஆகிய மாற்றங்கள் எமது நாட்டிலும் வெளிப்படலாயின. ஆனால் இரண்டாவது வத்திக்கான் சபையின் தரிசனம் எமது நாட்டில் முழுமையாக உணரப்படவில்லை, சமாதானத்துக்கும், முன்னேற்றத்துக்குமான சிந்தனையில் எவ்வளவோ செய்யப்பட இருக்கின்றன.'' என்றார் வண. எஸ். ஜே. இம்மனுவல்.

அவர் தொடர்ந்தார்-

''இதன் காரணமாக யாழ்தலத் திருச்சபையின் (மறைமாவட்டம்) சரித்திரத்தில முதல் முறையாக ஒரு மேய்ப்புப் பணி மகாநாடு நடைபெறவுள்ளது. மார்ச் 8-15 வரை நடைபெறவுள்ள இந்த மாநாட்டிற்காக கடந்த ஆறு மாதங்களாகக் குருக்கள், துறவிகள், பொது நிலையினர் சேர்ந்து பல திட்டங்களை வரைந்து ஆயத்தங்கள் செய்து வருகின்றனர். பல தரப்பட்ட விஷயங்கள் குறித்து மக்களின் அபிப்பிராயம் திரட்டப்பட்டது. கருத்தரங்குகள், அமர்வுகள் நடத்தப்பட்டன. இந்த மகாநாட்டில் மன்னார், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலைத் தலத் திருச்சபைப் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். இம்முறை கூடுதலாகப் பொது நிலையினர் கலந்து கொள்ள உள்ளார்கள்.''

இவ்வாறு அவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அன்பாலும் பண்பாலும் ஆதரித்த தெய்வமே
கண்பாயும் நீர்கொண்டு அஞ்சலித்து நிற்கின்றோம்
தூக்கி வளர்த்தவரே துணைகெட்டுத் தேம்புகிறோம்
உங்கள் ஆன்ம சாந்திக்கு வேண்டுகின்றோம்.

அமரரின் அந்தியேட்டி (27-02-94) இன்று நடைபெறும். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

த. தேவகுமார்
புலோலி தெற்கு,
புலோலி.

மனைவி, மக்கள்
மருமக்கள்.

(7623)

மண்ணில் மறைந்த எங்கள் அருமைத் தந்தையின்

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**திரு. இ. இரகுநாதன் (இலகுப்பிள்ளை)**

தோற்றம்: 5-3-1926 மறைவு: 2-3-1991

**திதி: 27-02-1994**

மண்மீது நலமாக நாம் வாழ வழிகள் கண்டீர்
கண்ணாக எமைக் காத்து உயர வைத்தீர்
பண்ணாக நாம் வாழ இசைத்து நின்றீர்
கண்ணில் நீர் கசியாது வளர்த்து வந்தீர்
இன்றோடு உம்முடல் பிரிந்து ஆனதையா
மூன்றாண்டு இருந்தாலும் எம்மோடு என்றும் உள்ளீர்

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்.

''உடையார் வளவு''
புன்னாலைக்கட்டுவன்,
27-2-1994

(7610)

# தபால்களை கொழும்பிற்கு அனுப்புவதிலும் தடங்கல்

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாநாட்டில் இருந்து தபால் பொதிகளை கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பிவைப்பதற்காக இரண்டு தினங்களுக்கு முன்னர் தமக்கு அறிவித்தல் தரவேண்டும் என சர்வதேச செஞ்சிலுவை சங்க பிரதிநிதி தம்மிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக பிரதம தபால் அலுவலக உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது தபால்களை அனுப்புவதற்கு முன்னதாக தபால் பொதிகளை தாம் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைப்பதாகவும், அவசியம் ஏற்படும் சமயத்தில் அரசாங்க அதிபர் அன்றி இட்டப் பணிப்பாளரிடமிருந்து கடிதங்களை பெற்றுக் கொடுப்பதாகவும் ஆனால் புதிய நடைமுறை தமக்கு பல நிர்வாக சிக்கல்களை உண்டுபண்ணும் எனத் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் இதுபோன்ற ஒரு நடைமுறை இருந்ததாகவும் அப்போது சிறிலங்கா பாதுகாப்பு நடவடிக்கை பணியகத்தில் அனுமதி பெற முடியாமல் தபால் பொதிகள் இங்கு தேக்கம் அடைந்து காணப்பட்டமையை குறிப்பிட்டு, மீண்டும் அந்த நிலை தோன்ற இது வழிவகுக்கும் எனவும் தெரிவித்தார். (நி)

## கிராமிய திட்டங்கள்

சமூக மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் பல்வேறு கிராமிய மேம்பாட்டு திட்டங்கள் கிராமியஉற்பத்திக் குழுக்களால் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் கிராமங்களில் அடிப்படையான பொருண்மிய மேம்பாடு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வகையில் மன்னார் மாவட்டத்திலுள்ள நாச்சிக்குடா கிராமத்தில் தும்பு உற்பத்தி நடவடிக்கைகளும் பள்ளிக்குடா, செம்மண்குன்று ஆகிய கிராமங்களில் கோழி வளர்ப்புத் திட்டங்களும் இரணைதீவில் கருவாடு பதப்படுத்துதலும் அரிப்பு கிராமத்தில் தென்னை உற்பத்தித் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

### மன்றக் கலைப்பணி

கடந்த 15 தினங்களாக இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்ற இசைவிழா இன்றுடன் நிறைவு பெறுகிறது. வருடாந்தம் 15 நாள் இசை விழா, மாதாந்தம் ஒருநாள் இசைவிழா, வார இறுதி இசை வகுப்புகள் ஆகியன இம் மன்றத்தின் தற்போதைய செயற்பாடுகளாக காணப்படுகின்றது.

எதிர்காலத்தில் இசைப் போட்டிகள், இசை விழாக்களில் ஆய்வரங்குகள் என்பன இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. 1992இல் இன்றைய இளங்கலைஞர் மன்ற கட்டுமானப் பணிகள் ஆரம்பித்து 1993 மாசியில் முடிவுற்றது.

# தமிழர் வைக்கும் கண்ணி வெடியில் இந்திய இராணுவ டாங்கி தூளாகட்டும்

## வை. கோபால்சாமி தெரிவிப்பு

(சென்னை)
அறிவாலயம் தூள் தூளாகுமென்று நான் பேசவில்லை. பேசவும் மாட்டேன். ஏனெனில் அது தொண்டர்களின் கண்ணீரில் ரத்தத்தில் வியர்வையில் உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாளிகை ஆகும். இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழக (வை.கோ) அணியின் சார்பில் சென்னை பெரியார் திடலில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டு பேசிய கோபால்சாமி தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் அறிவாலயம் உங்களுடைய குடும்பச் சொத்து அல்ல அது இயக்கத்தின் தொண்டனுக்கு வந்து சேர வேண்டிய காலத்தில் வரும்.

இந்திய இராணுவத்தின் டாங்கிகள் தான் தூளாகட்டுமென்று பேசியிருக்கிறேன். பழ கருப்பையாவை பக்கத்திலே வைத்துக் கொண்டு இரண்டாண்டு காலமாக சிறையில் இருக்கும் கோவை ராமகிருஷ்ணனை பக்கத்தில் வைத்துக் கொண்டு திலீபனுக்காக நினைவு நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டபோது பேசினேன். இந்திய ராணுவத்தின் டாங்கிகள் தமிழர்கள் வைக்கின்ற கண்ணிவெடியில் தூள் தூளாகட்டும் என்று பேசியிருக்கிறேன்.

நானும் ஜெயின் மிசனில் பிரமாண வாக்கு மூலம் செய்திருக்கிறேன். பிரமாண வாக்கு மூலத்தின் கருத்துக்களை வெளிப்படுத்துவதை கமிசன் ஏற்றுக்கொள்ளாது என்ற காரணத்திற்காக நான் வெளிப்படுத்த விரும்பவில்லை. ஆனால் நீங்கள் தந்த வாக்கு மூலத்தை நாட்டுக்கு தெரிவித்த அதே சக்திகள் எனது பிரமாண வாக்கு மூலத்தையும் தரட்டும் உங்களுடைய பிரமாண வாக்குமூலம் வெளிவர வேண்டுமென்று முரசொலிமாறன் மூலம் முயற்சி செய்தீர்கள். காங்கிரசோடு நீங்கள் நடத்திய அந்தரங்கக் காதலுக்கு இது பாலமாக அமையும் என்று கருதினீர்கள். ஆனால் வகையாக சிக்கிக் கொண்டீர்கள். நீங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆத்திரப்படுகிறீர்கள். கோபப்படுகிறீர்கள். என்னைக் கொல்ல சதி முயற்சி நடப்பதாக தெரிவிக்கிறீர்கள். உங்களுக்கு மன நோய் ஏதும் ஏற்பட்டுவிட்டதா? வீரன் ஒருமுறை தான் சாவான். கோழை பலமுறை சாவான் எனவும் தெரிவித்தார்.

# பாகர்கள் மீது யானை ஆவேசத் தாக்குதல்

(கொழும்பு)
இரத்தினபுரி சமன் தேவாலயத்திற்கு சொந்தமான யானை ஒன்று அதன் ஐந்தாவது யானைப் பாகனையும் அடித்துக் கொன்றதுடன் பாகனின் உடலை இரு துண்டுகளாகப் பிளந்து மேலே வீசியும் கீழே போட்டு மிதித்தும் பெரும் அட்டகாசம் செய்து ஊர்மக்களைப் பெரும் பீதிக்குள்ளாக்கியது.

ஒப்பநாயக்க பொலிஸ் வட்டாரத்தைச் சேர்ந்த உடகெலய என்ற இடத்திலுள்ள இறப்பர் தோட்டமொன்றிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இச்சம்பவத்தில் இக்கி பரிதாபகர மரணத்தைத் தழுவிக் கொண்டவர் எம். எம். ஜயசேன (வயது 65) என்பவராவார்.

மேற்படி சம்பவம் கடந்த 10ஆம் திகதி நடைபெற்றுள்ளது. இவ்வாறு ஏற்கனவே நான்கு யானைப் பாகன்களை இந்த யானை அடித்துக் கொலை செய்துள்ளது. ஆயினும் இம்முறையே மிக மோசமான முறையில் தாக்கி கொலை செய்துள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

கொலை செய்த யானைப் பாகனின் உடல் சின்னா பின்னப்படுத்தப்பட்டிருந்த நிலையில் உடலின் துண்டுகள் உடகெலய இறப்பர் தோட்டத்தில் அங்குமிங்குமாக சிதறிக் கிடந்தன. இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக இரத்தினபுரி சமன் தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமேவுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் பேராதனை மிருகக்காட்சி சாலையிலுள்ள அதிகாரிகளை வரவழைத்து யானைக்கு மயக்க மருந்தை ஊசிமூலம் ஏற்றியபின் யானையின் நான்கு கால்களையும் அசைக்க முடியாதவாறு அருகிலுள்ள பெரிய மரமொன்றில் சங்கிலியால் பிணைக்கப்பட்டது.

மேற்படி பாகன் சில தினங்களாகவே யானையிடத்தில் அதிக வேலை வாங்கி வந்ததாகவும் சம்பவதினம் சில பெரிய மரங்களை யானையைக்கொண்டு லொறியில் ஏற்றியபின் யானைமீது ஏறி சிறிது தூரம் வந்துள்ளார். கீழே இறங்குவதற்கு யானையின் காலை கேட்டபோது யானை பாகனுக்கு இறங்க நீட்டியுள்ளது. பாகன் இறங்க முயற்சித்தபோதே தும்பிக்கையால் அவரை இழுத்தெடுத்து இந்த அனர்த்தத்தைச் செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த யானை பலமணி நேரம் அட்டகாசம் புரிந்துள்ளதுடன் இரு வாகனங்களையும், மரங்களையும் தாக்கி சேதம் விளைவித்துள்ளதாகவும் இதனால் இப்பகுதியில் போக்குவரத்து பலமணி நேரமாக பாதிகப்பட்டதுடன் ஊர்மக்களும் 'கிலி' கொண்டு காட்டுக்குள் ஓடி ஒளித்துக் கொண்டனர்.

# அமெரிக்கா-பாகிஸ்தான் எமக்கு எதிரானவை

## இந்திய கல்விமான்கள்

(டில்லி)
அமெரிக்காவும், பாகிஸ்தானும் இந்தியாவிற்கு எதிரான நிலைப்பாட்டையே அப்பட்டமாகப் பின்பற்றி வருவதாக இந்தியப் பத்திரிகையாளர்களும் நிதித்துறையாளர்களும். கல்விமான்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர். புதுடில்லியில் இருந்து இயங்கும் 'சேர்ச்' என்னும் அமைப்பைச் சேர்ந்த இவர்கள், காஷ்மீர் தொடர்பாக அண்மையில் நடாத்திய கூட்டத்தின்போது காஷ்மீர் பற்றி கிளிண்டன் நிர்வாகத்தினர் கூறியுள்ள கருத்துக்கள் அடிப்படை மனித உரிமைகள் விடயத்தில் அமெரிக்கா காட்டும் ஆர்வம் எவ்வளவு போலியானது என்பதைக் காட்டுவதாகத் தெரிவித்தனர்

<u>இந்தியாவிற்கு எதிரான</u>

# பாகிஸ்தான் பிரசாரம் கபடத்தனமானது

## - இந்திய அமைச்சர்

(ஜெனிவா)
காஷ்மீரைக் கைப்பற்றுவதற்காக மூன்று முறை முயற்சித்து தோல்வியுற்ற பாகிஸ்தான் இப்போது கபடத்தனமான முறையில் இந்தியாவிற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற முற்பட்டிருப்பதாக இந்திய வெளியுறவு இணை அமைச்சர் சல்மான் குர்ஷித் ஜெனிவாவில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் இந்தியாவை தொடர்ந்து இழிமொழிகளால் தூற்றும் பிரசாரத்தில் பாகிஸ்தான் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்தார்?

# பாப்பரசின் ஸ்ரீலங்கா விஜயம் முன்னேற்பாடுகள் ஆரம்பம்

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் வருகையை முன்னிட்டு பாதுகாப்பான இடத்தை தேர்ந்து எடுப்பதற்கு விசேட பாதுகாப்பு முன்னேற்பாட்டுக்குழு ஒன்று சிறிலங்கா வரவுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இருபதாம் திகதி இவர் சிறிலங்காவில் ஒருநாள் தரித்து நிற்பார் என்றும் வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இருபதாம் திகதி மாலை நான்கு மணிக்கு சிறிலங்காவுக்கு வந்து சேருவார் என்றும் இருபத்தொராம் திகதி நான்கு மணிக்கு சிறிலங்காவை விட்டு வெளியேறவுள்ளார். இதனால் இவரின் தாக நம்பப்பட்ட போதும் இதற்கான சாத்தியக்கூறு இருந்த போதும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொள்ள இருப்பதினால் அதற்கான இடவசதி அங்கு இல்லாமையினால் கொழும்பு காலிமுக திடல் இதற்கான வைபவம் நடத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நி)

## அன்பளிப்பு

யாழ் மத்திய கல்லூரி லியோக்கழகம் சார்பில் அங்கவீனர் ஒருவருக்கு முச்சக்கர வண்டி ஒன்றை வழங்க முன்வந்துள்ளது.

# ஜெயலலிதா அரசை எதிர்ப்போர் பலவீனப்பட்டு போகின்றனர்

## - நெடுஞ்செழியன்

(சென்னை)
தமிழகத்தில் ஜெயலலிதா அரசை எதிர்த்து வரும் கட்சிகள் தான் பிளவுபட்டுக் கொண்டே இருக்கின்றன. எதிர்ப்போர் தான் பலமிழந்து கொண்டு இருக்கின்றனர் இந்த அரசைக் கவிழ்க்க நினைப்போர்தான் கவிழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

இவ்வாறு தமிழக நிதிஅமைச்சர் இரா.நெடுஞ்செழியன் கூறியுள்ளார் அண்மையில் ஜெயலலிதா பெயரிலான ஜே. ஜே டி. ரி. போக்குவரத்து கழகத்தின் முதலாவது பஸ்ஸை இயக்கி வைத்த பின் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் பஸ்கள் அப்படியானவையல்ல.

ஜே. ஜே. டி. ரி. பஸ்கள் குளுகுளு வசதி கொண்டவை இதில் நன்றாக கால் நீட்டி சாய்ந்தபடி பயணம் செய்யலாம் மெத்தை வசதி உண்டு இந்த பஸ்களில் பயணம் செய்தபடி கோப்புகளை பார்வையிடலாமா எனக் கருதும் அளவுக்கு வசதிகள் உள்ளன.

இது போல தமிழக அரசு என்ற பஸ்ஸை சாரதியாக இருந்து ஜெயலலிதா இயக்கிக் கொண்டிருக்கிறார் இந்த சிறப்பை பொறுக்க முடியாத சுயநலமிகள் கவிழ்க்க நினைக்கின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

# ரயில் மறிப்பு போரில் தி. மு க. நாளை ஈடுபடும்

(சென்னை)
பட்டுள்ளன. இன்று புறப்பட

# கோதுமை மா நுகர்ச்சி

வர் எம். எம். ஜயசேன (வயது 65) என்பவராவார்;

மேற்படி சம்பவம் கடந்த 10ஆம் திகதி நடைபெற்றுள்ளது. இவ்வாறு ஏற்கனவே நான்கு யானைப் பாகன்களை இந்த யானை அடித்துக் கொலை செய்துள்ளது. ஆயினும் இம்முறையே மிக மோசமான முறையில் தாக்கி கொலை செய்துள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்

கொலை செய்த யானைப் பாகனின் உடல் சின்னாபின்னப்படுத்தப்பட்டிருந்த நிலையில் உடலின் துண்டுகள் உடலைய இறப்பர் தோட்டத்தில் அங்குமிங்குமாக சிதறிக் கிடந்தன; இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக சிறிது தூரம் வந்துள்ளார்; கீழே இறங்குவதற்கு யானையின் காலை கேட்டபோது யானை பாகனுக்கு இறங்க நீட்டியுள்ளது. பாகன் இறங்க முயற்சித்தபோதே தும்பிக்கையால் அவரை இழுத்தெடுத்து இந்த அனர்த்தத்தைச் செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த யானை பலமணி நேரம் அட்டகாசம் புரிந்துள்ளதுடன் இரு வாகனங்களையும், மரங்களையும் தாக்கி சேதம் விளைவித்துள்ளதாகவும் இதனால் இப்பகுதியில் போக்குவரத்து பலமணி நேரமாக பாதிக்கப்பட்டதுடன் ஊர்மக்களும் 'கிலி' கொண்டு காட்டுக்குள் ஓடி ஒளித்துக் கொண்டனர்.

## கோதுமை மா நுகர்ச்சி இவ்வருடம் அதிகரிக்கலாம்

**- திட்டமிடல் பணிப்பாளர்**

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம்மாவின்நுகர்ச்சி சென்ற வருடத்தைவிட இருபது சதவீதமாக அதிகரிக்கப்படலாம் என திட்டமிடல் பணிப்பாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

கடுமையான மழைவீழ்ச்சி அசாதாரண காலநிலைகாரணமாகஎமது விவசாயஉணவு பயிர்கள் அழிந்துள்ளமையாலும் யாழ் குடாநாட்டிற்கு விறகு தட்டுப்பாடு நிலவுவதினாலும் இந் நிலைமைஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடம் முப்பத்தையாயிரத்து இருநூற்று அறுபத்து மூன்று (35,263) மெற்றிக் தொன் மா 19 கப்பல்மூலம்கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் திட்டமிடல் பணிப்பாளர் அலுவலக பகுதியினர் தெரிவித்துள்ளனர். (நி)


# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**இராசையா செல்வராசா**

(இளைப்பாறிய ஆசிரியர்)

**திதி:- 27-2-1994**

ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
நீண்ட நம்துயர் நீங்காது
உங்கள் நினைவு என்றும் எம்நெஞ்சில்
பசுமையாய் நிறையும்;

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்;

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரன், பேர்த்திமார்.

(7625)


## முன்னேற்பாடுகள் ஆரம்பம்

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் வருகையை முன்னிட்டு பாதுகாப்பான இடத்தை தேர்ந்து எடுப்பதற்கு விசேட பாதுகாப்பு முன்னேற்பாட்டுக்குழு ஒன்று சிறிலங்கா வரவுள்ளது;

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இருபதாம் திகதி இவர் சிறிலங்காவில் ஒருநாள் தரித்து நிற்பார் என்றும் வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இருபதாம் திகதி மாலை நான்கு மணிக்கு சிறிலங்காவுக்கு வந்து சேருவார் என்றும் இருபதிதொராம் திகதி நான்கு மணிக்கு சிறிலங்காவை விட்டு வெளியேறவுள்ளார். இதனால் இவரின் பயணம் கொழும்புக்கு வெளியே இடம் பெறுமா என்பது தொடர்பாக இன்னும் தெளிவாக இல்லை. அந்த இடத்தை வத்திகான் பாதுகாப்பு அதிகாரிகளே முடிவெடுப்பர் என்றும் இதற்காக அடுத்த மாதம் இவ் வத்திக்கான் அதிகாரிகள் கொழும்புக்கு வர இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் இவரது சமய வைபவம் நடைபெற இருப்பதாக நம்பப்பட்ட போதும் இதற்கான சாத்தியக்கூறு இருந்த போதும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொள்ள இருப்பதினால் அதற்கான இடவசதி அங்கு இல்லாமையினால் கொழும்பு காலிமுக திடல் இதற்கான வைபவம் நடத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (தி)

### அன்பளிப்பு

யாழ் மத்திய கல்லூரி லியோக்கழகம் சார்பில் அங்கவீனர் ஒருவருக்கு முச்சக்கர வண்டி ஒன்றை வழங்க முன்வந்துள்ளது.

மேற்படி முச்சக்கர வண்டியை வழங்குவதற்கு மத்திய கல்லூரி லியோக்கழகம் ஒருவரை தெரிவு செய்ய வேண்டி இருப்பதால் முச்சக்கர வண்டி தேவைப்படுபவர்கள் தமது குடும்ப பொருளாதார நிலை போன்ற விபரங்களுடன் யாழ். மத்திய கல்லூரி லியோக்கழகத்திற்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.


# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
**16-11-1959**

ஆண்டவன் அடியில்
**05-03-1988**

**திருமதி வதனி சச்சிதானந்தன்**

**திதி 27 - 02 - 1994**

ஆறாத்துயரில் எமையெல்லாம் ஆழ்த்தி விட்டு நீ சென்று ஆறாண்டு சென்றதம்மா - ஆனாலும் ஆறாது எம் துயரம் தீராது எம் கவலை எம் ஆவி எமை விட்டுப் பிரியும் வரை உம் நினைவால் வாடி நிற்கும்;

நுணாவில் மேற்கு
சாவகச்சேரி.

அன்பு அம்மா, அப்பா
சகோதர சகோதரிகள்,
அத்தான்மார், மச்சான்மார்,
பெறாமக்கள், மருமக்கள்,
மாமா, மாமி.

(7624)


## பலவீனப்பட்டு போகின்றனர்

**- நெடுஞ்செழியன்**

(சென்னை)

தமிழகத்தில் ஜெயலலிதா அரசை எதிர்த்து வரும் கட்சிகள் தான் பிளவுபட்டுக் கொண்டே இருக்கின்றன. எதிர்ப்போர் தான் பலமிழந்து கொண்டு இருக்கின்றனர் இந்த அரசைக் கவிழ்க்க நினைப்போர்தான் கவிழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

இவ்வாறு தமிழக நிதிஅமைச்சர் இரா.நெடுஞ்செழியன் கூறியுள்ளார் அண்மையில் ஜெயலலிதா பெயரிலானஜே. ஜே டி. ரி. போக்குவரத்து கழகத்தின் முதலாவது பஸ்ஸை இயக்கி வைத்த பின் நடந்த பொதுக்கூட்டத்தில்அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது.

மற்ற மாநிலங்களுக்கு போகும்போது அங்குள்ள பஸ்களை பார்த்தால் கைவிட்ட லாரிகளை வடிவம் மாற்றி பஸ் மாதிரி இயக்குகின்றார்களோ என எண்ணத்தோன்றும் ஆனால் தமிழக அரசு பஸ்கள் அப்படியானவை யல்ல;

ஜே. ஜே. டி. ரி. பஸ்கள் குளுகுளுவசதி கொண்டவை இதில் நன்றாக கால் நீட்டி சாய்ந்தபடி பயணம் செய்யலாம்; மெத்தை வசதி உண்டு இந்த பஸ்களில் பயணம் செய்தபடி கோப்புகளை பார்வையிடலாமா எனக் கருதும் அளவுக்கு வசதிகள் உள்ளன.

இது போல தமிழக அரசு என்ற பஸ்சை சாரதியாக இருந்துஜெயலலிதா இயக்கிக் கொண்டிருக்கிறார் இந்த சிறப்பை பொறுக்க முடியாத சுயநலமிகள் கவிழ்க்க நினைக்கின்றனர் எனவும் குறிப்பிட்டார்;

## ரயில் மறிப்பு போரில் தி. மு க. நாளை ஈடுபடும்

(சென்னை)

தமிழ்நாட்டில் நாளை திங்கட்கிழமையன்று ரயில் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தப்போவதாக திராவிட முன்னேற்றக்கழகம் அறிவித்துள்ளது.

இதனை அடுத்து தென்னக ரயில்வேயின் நேரங்களில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இன்று புறப்பட வேண்டிய ரயில்கள் சில ரத்துச் செய்யப்பட்டு இருப்பதுடன், பிற்பகலில் புறப்பட இருந்த ரயில்களின் நேரங்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. நாளையும் ரயில்களின் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### ஜெயலலிதா கண்டனம்

(சென்னை)

பங்கீட்டு அடிப்படையில், வழங்கப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலைகளை மத்திய அரசு உயர்த்தியுள்ளமைக்கு முதலமைச்சர் ஜெயலலிதா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பல வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடக்கி வைத்த முதலமைச்சர் ஜெயலலிதா அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மேலும் உரையாற்றும் போது இந்த விலை உயர்வுகளினால் ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்றும் எனவே இவ் விலை உயர்வை ரத்துச் செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

### ஆளுநர் ஆட்சி நீடிப்பு

பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணத்தில் இரண்டுமாத காலத்திற்கு ஆளுநர்ஆட்சியே நீடிக்கும்என்று பாகிஸ்தான் அதிபர் அப்துல் லகாரி அறிவித்துள்ளார் அம் மாகாணத்தில் ஆளும் மக்கள் கட்சியின் ஆட்சிக்கு எதிராக நம்பிக்கை இல்லாப்பிரேரணைகொண்டு வரப்பட்டதையடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அதிபர் மாளிகை வட்டாரங்கள் கூறியுள்ளன;

## விரைவில் பிரதமர் ராவிடம் புகார் பட்டியல்கொடுப்பேன்

**-வாழப்பாடி இராமமூர்த்தி**

தமிழக அரசு மீது விரைவில் புகார்கூறும் பட்டியல் ஒன்றை பிரதமர் பி. வி. நரசிம்மராவிடம் கொடுக்க இருப்பதாக தமிழக காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

வேலூர் அரசு சுற்றுலா மாளிகையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர் மேலும் கூறுகையில் தமிழ் நாட்டில் ஆளுநருக்கும் முதல்வருக்குமான உறவில் சுமுகமான நிலை இல்லை. தமிழக அரசின் செயல்களை மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது. அவகாசமும் கொடுத்து வருகிறது.

ஊழல் மலிந்துவிட்ட இந்த ஆட்சியை கலைக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். இதற்காக பிரதமரை சந்தித்து வலியுறுத்தியும் வருகிறேன்.

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களுடன் சமாதானம் செய்துகொண்டு விடுதலைப்புலிகளின் நடமாட்டம் தொடர்பாக தமிழக அரசு மெத்தனமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்;

## விலைவாசி உயர்வினால் சென்னையில் ஒப்பாரி

(சென்னை)

விலைவாசி உயர்வைக் கண்டித்து சென்னையில் பெண்கள் ஒப்பாரிப்போராட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர். சுயாதிபத்தியம், வேலைவாய்ப்பு, பொதுத்துறை, பொதுவிநியோக முறை, நாட்டுவளம், மக்கள் வாழ்க்கைத்தரம் போன்றவை நாளுக்கு நாள் செத்துக் கொண்டிருப்பதைக் குறிக்கும் வகையில் எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய அட்டைகளை கீழே கிடத்தி அதைச் சுற்றி ஏராளமான பெண்கள் ஒருவருக்கொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு வாயிலும் மாரிலும் அடித்து ஒப்பாரி வைத்து அழுது போராட்டம் நடாத்தினர்;

சென்னை குறளகம் கட்டிடத்திற்கு எதிராக நடாத்தப்பட்ட இப்போராட்டத்தினை ஜனநாயக மாதர் சங்கத்தின் சென்னை மாவட்டக் குழு ஏற்பாடு செய்திருந்தது,

இந்த ஒப்பாரிப்போராட்டம் இருமணி நேரத்துக்கும் அதிகமாக நீடித்தது குறிப்பிடத்தக்கது,

## சிந்தனைக்கு

ஒரு செயல் மனதில் பதிவதைப் போல் ஆயிரம் சொற்கள் கூடப் பதிய மாட்டாது.

- ஹென்ரிக் இப்ஸென்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-02-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05


# எதிர்த்தரப்பினரின் அவலக்குரல்

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள தேர்தல்கள் ஜனநாயக மரபிற்கு உட்பட்டவையாக நடைபெற மாட்டாது என அதில் பங்குபற்றும் எதிரணியினரான சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரும் குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளனர். தேர்தலில் நம்பிக்கைத் தன்மை குறித்து ஐயுறவும் கொண்டுள்ளனர்.

பொலிஸ் நிலையங்களும், இராணுவ முகாம்களும் ஐக்கிய தேசியக்கட்சியினரின் தேர்தல் அலுவலகங்களாகச் செயற்படுவதாகவும், மக்கள் மிரட்டப்படுவதாகவும் அவை குற்றம் சாட்டி வருகின்றன. அத்தோடு, அரசாங்க வளங்களும் முழுமையாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் குறை கூறியுள்ளனர்.

ஐ. தே. கட்சி அரசாங்கம் ஜனநாயக விரோதப் போக்கைக் கைக்கொள்கின்றது தேர்தல் மோசடிகளில் அது ஈடுபடும் / ஈடுபடுகின்றது என்பதெல்லாம் எதிர்பார்க்கப்பட்ட தொன்றுதான். ஆனால், அதனை எதிர்க்கட்சிகள் அன்று பொருட்படுத்தவில்லை. தேர்தலில் போட்டியிடுவதென்றே முடிவு செய்தன.

ஏனெனில், ஜனநாயக மீறல்களும், இராணுவ அழுத்தங்களும் தமிழ் மக்களுக்கு மட்டுமே என்றே அவை கருதின. இதனால் பாதிக்கப்படப் போவது தமிழர்கள் என்பதால் ஐ. தே. க வுடன் போட்டியிட்டு கிழக்கு மாகாண அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டினாலேயே செயற்பட்டன. அவ்வாறு இல்லாது விட்டால் அவை தேர்தலைப் புறக்கணித்திருக்கலாம்; இன்று இவ்வாறான கூச்சல் போட்டிருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஏனெனில், முன்னனுபவம் நிறையவே உண்டு.

சிறிலங்கா எதிர்க்கட்சிகள் எப்பொழுதுமே அரசாங்கத்தின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளும், சட்டங்களும் தமிழ் மக்களுக்கு எதிரானவை என்றே கருதின. அவை ஒருபோதும் தம்மைப் பாதிக்கும் என எண்ணவில்லை.

# வலுவிழக்கும் இந்திய ஜனநாயகம்

பாராளுமன்றப் பாதையையோ அல்லது பாராளுமன்றத்திற்கான வழமையான தேர்தல்களையோ கைவிட இந்தியா தயாராக உள்ளது எனக் கூறிவிட முடியாது. அண்மையில் இந்தியாவின் ஐந்து வடமாநிலங்களில் ஐந்துகோடி வாக்காளர்கள் சம்பந்தப்பட்ட ஒரு மாத காலம் வரையிலான தேர்தல் பணிகள் இடம்பெற்றன, அத்தேர்தல்கள் அரங்கேற்றப்பட்டவையாகவோ அல்லது பெருமளவில் மோசடிகள் செய்யப்பட்டவையாகவோ இருக்கவில்லை. இப்போது இந்திய வாக்காளர்களின் உற்சாகம் குன்றியுள்ளது. இறுதியில் யார் வெல்கின்றனர் அல்லது தோற்கின்றனர் என்பதில் இந்தியர்கள் கவலையற்றவர்களாக உள்ளனர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இது இப்படியாக இருக்கவில்லை. பெரும் பலத்துடன் தனது காங்கிரஸ் கட்சியை மீண்டும் அதிகாரத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் வறுமையை ஒழிக்க அன்று இந்திராகாந்தி விடுத்த அழைப்புக்கு இந்திய வாக்காளர்கள் அமோக ஆதரவளித்தனர். 'இந்திரா அலை' என இது அழைக்கப்பட்டது. அதையடுத்து இந்திராவின் அவசரகால நிலை அரசால் நடந்த வரம்பு மீறல்களுக்கு எதிராக மக்களின் வெறுப்பு அலை ஒன்று எழுந்தது. இதனால் 1977இல் இந்திரா காந்தி பதவியிலிருந்து அகற்றப்பட்டார்- ஜனதாக் கட்சி அரசாங்கம் அமைத்தது. ஆனால் சிறிது காலம் மட்டுமே அந்த அரசு நீடித்தது ஜனதா அரசின் தவறான நிர்வாகத்தினால் இந்திராவுக்கு ஆதரவாக மற்றொரு அலை உருவாகி 1980இல் அவர் மீண்டும் பதவிக்கு வந்தார்.

மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் இந்திராவின் படுகொலையால் ஏற்பட்ட அனுதாப அலையில் அவரது மகன் 1984இல் அமோகமாக தேர்தலில் வெற்றி பெற்றார்.

இதையடுத்து இந்த 'அலைகள்' மறைந்து விட்டன. 1991 இலும், 1992 இலும் நடைபெற்ற இரு தோதல்களிலும் தனிக்கட்சி ஆட்சியை விட தொங்கு பாராளுமன்றத்தையே இந்தியர்கள் விரும்பினர். எந்த ஒரு அரசியல் கட்சிகளினதும் வாக்குறுதிகளை அவர்கள் இனிமேலும் நம்பத் தயாரில்லை. பலமான அரசு ஒன்று இது ஜனநாயகத்தின் எந்த நிற அணியைத் தெரிவு செய்து கொண்டாலும் சர்வாதிகாரப் போக்கில் செல்லவே விழையும் என்ற கசப்பான உண்மைக்கு பிரதிபலிப்பையும் வெளிப்படுத்தினர்.

இந்தியாவில் மட்டுமல்ல மேற்குலக ஜனநாயகத்திலும் இவ்வாறான ஒருவிளக்கம் ஏகோபித்த விருப்பின் தன்னாதிக்கத்திற்கு மேலதிக வலு வழங்குவதைக் காணுதல் அரிது அநேகமாக எல்லா அரசியல் வாதிகளிலும் நம்பிக்கை இழப்பை ஒப்புக்கொள்வதாக இருக்கலாம். இருப்பினும் அரசியல்வாதிகள் உயிர் வாழவும் சமூகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தவும் கட்சிப் போட்டிகளும் தேர்தல்களும் அவசியம். இதனால் அவர்கள் ஜனநாயகத்தைத் தொடர்ந்து இயங்கச் செய்தல் வேண்டும். ஜனநாயக அமைப்பு ஒன்றில் உள்ள முழு அரசியல் வர்க்கமும் குற்றவாளியாக மாறும்போது என்ன பரிகாரத்தை கோர முடியும்? இந்தியாவில் சமீபத்தில் நடைபெற்ற தேர்தல்களில் போட்டியிட பல தரப்பட்ட அரசியல் கட்சிகளால் நிறுத்தப்பட்ட அபேட்சகர்களில் பெரும்பாலும் கால்பங்கினர் பொலிசாரால் கொலை, களவு, திருட்டு குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டவர்களாவர். அரசாங்க அதிகாரிகள் சம்பந்தப்பட்ட சமீபத்திய ஊழல்கள் இந்தியாவின் அரசியல் அதிகாரத்தில் உள்ள பெருமையை மாசுபடுத்தி விட்டது.

இருந்தும் அதிகாரச் சுக்கானைப் பிடிக்க அரசியல்வாதிகள் போட்டியிடுகின்றனர். வாக்காளர்களின் சாதி, இன, பிராந்திய உணர்வுகளைத் தமது சுயநலத்திற்காக பயன்படுத்தும் ஒரு கருவியாக தேர்தல் நடைமுறைகள் அவர்களது கைகளில் மாறியுள்ளது. அந்தக் கருவி ஒன்றும் புதியது அல்ல. தேர்தல்கள் வரும்போது முஸ்லிம்களின் ஆதரவை உறுதிப்படுத்துவதற்காக அவர்களைப் பயமுறுத்த இந்திரா இந்தச் சீட்டை முதலில் பயன்படுத்தினார்.

பின்னர் பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் ஆதரவை பெறுவதற்காக மதச்சார்பற்ற ஜனதாகட்சி சாதி உணர்வுகளைப்பயன்படுத்தியது இவை எல்லாம் பாரதீய ஜனதாகட்சியை தீவிர இந்து வாதத்தை நோக்கி தள்ளிவிட்டன. அரசியலில் மதம் நுழைய இது வழிவகுத்தது இதன் மூலம் இந்தியாவின் மதச்சார்பின்மை களங்கத்திற்குள்ளாகியது.

பெரும்பான்மை இந்து மனோபாவத்தின் இந்த எழுச்சி பஞ்சாப்பில் சீக்கியர், காஷ்மீரில் முஸ்லிம்கள் வடகிழக்கில் உள்ள இந்து அல்லாத பூர்வீககுடிகள் போன்ற சமூகங்களை விலகிச் செல்ல பங்களித்தது. புதுடில்லியின் கூடுதல் அதிகாரத்தனத்தை நீக்குவதற்காக சுயாட்சிக்கு இச்சமூகங்கள் கோரிக்கை விடுகின்றன. ஆனால் மத்தியில் உள்ள எந்த அரசும் இக்கோரிக்கைகளை நினைத்துக்கூடப்பார்க்க முடியாது, இவ்வாறான கோரிக்கைகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு கூட இணங்குவதாக தெரிந்தால் அல்லது சந்தேகிக்கப்பட்டால் மத்திய அரசு அரசியலில் உயிர் வாழ முடியாது என்பது இதற்கு காரணமாகும் இந்திய ஜனநாயகத்திற்கு இது சிக்கலான ஒரு நிலையை தோற்றுவிக்கின்றது வேற்றுமையில் ஒற்றுமை காண்பது என்ற கருப்பொருள் இந்திய ஜனநாயகத்தில் அடிக்கடி கூறப்படுவதாகும். எவ்வாறாயினும் தேசிய ஒருமைப்பாடு என்ற கோஷத்தில் வேற்றுமை புதையுண்டு போய் விடுகின்றது. பிராந்தியங்களில் சிறுபான்மையினர் அபிலாசைகளை அடக்க படைப்பலத்தை அரசு அடிக்கடி பிரயோகிப்பதை இது முன்னிலைப்படுத்துகிறது. ஒரு தசாப்தத்திற்கு மேலாக இந்தியாவின் எல்லை பரா இராணுவப் படைகள் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன பஞ்சாப் காஷ்மீர் மாநிலங்களில் எல்லையஎல்லைமாநிலங்களில் தீவிரவாதிகளை கண்டுபிடிக்க இந்தியாவின் நிரந்தர ஆயுதப் படைகள் கூடுதலாக பயன்படுகின்றன.

ஒரு பாராளுமன்ற முறையைக்காட்டிலும் ஒரு பரா இராணுவத்தை ஒத்ததாக இருப்பது போன்று இந்திய ஜனநாயகத்தின் அடித்தளம் முரண்படுகிறதா? வெஸ்ட்மின்ஸ்டர் முறையிலான குறைபாடுகளை சிலர் இதில் காண்கின்றனர் மனித உரிமைகளை பெரிதாக கருதுவோர் இதைஏமாற்றுஎன்கின்றனர். தாராளமய ஜனநாயக அமைப்பு முறை ஒன்றின் வளத்தை இந்தியாவின் அரசியல் வர்க்கம் கூடுதலாக துஷ்பிரயோகம் செய்ததாக இது இருக்கலாம். இந்திய ஜனநாயகம் அதன் வலுவை இழக்கின்றதா?

(இன்டர்ஸோ பிரஸ்)

யாழ். செஞ்சிலுவை சங்க

# நடமாடும் வைத்திய பிரிவுக்கு இராணுவம் தடை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவை சங்கத்தின் நடமாடும் வைத்திய பிரிவுக்கு கூட்டு நடவடிக்கை பணியகத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது வரைகாலமும் யாழ் செஞ்சிலுவை சங்கத்தினால் மூன்று நடமாடும் வைத்திய பிரிவுகள் நடாத்தப்பட்டு வந்ததாகவும் அவற்றில் ஒன்றை முற்றாக கூட்டு நடவடிக்கை பிரிவு தடைசெய்ததுடன் மற்றைய இரண்டு பிரிவையும் மட்டுப்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வில் கட்டுப்படுத்த இராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு முன்னோடி நடவடிக்கையாக இது அமையும் என எதிர்பார்க்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

வவுனியா நகரப் பகுதியில்

# முஸ்லிம்களின் கடைகள் சிங்களவருக்கு விநியோகம்

வவுனியா நகரின் முஸ்லிம் வர்த்தகருக்கு சொந்தமான அங்காடி கடைகள் உடைக்கப்பட்டு இருபத்தி நான்கு மணி நேரத்தில் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா நகரிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றது.

நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் மேற்படி புதிய கடைகள் மீது தொடர்ந்து இராணுவத்தினர் காவல் புரிவதாக அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

வவுனியா நகரை முழுமையான சிங்கள ஆதிக்கத்தின்

வவுனியா உள்ளூராட்சித் தேர்தல்

# நகர மண்டபத்தில் மட்டுமே பிரசாரக் கூட்டங்கள்

(வவுனியா)

வவுனியா நகரசபை உள்ளூராட்சி தேர்தல் கூட்டங்கள் வவுனியா நகர மண்டபத்தில் மட்டும் நடை பெறுவதாக வவுனியா நகர சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நகரசபை மண்டபத்தை சுற்றி பொலிஸ் இராணுவ வேலி அமைக்கப்பட்டதை போன்று பாதுகாப்பு தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகவும், சகல பொதுக் கூட்டங்களிலும் பேச்சாளர்களின் பேச்சுக்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு இராணுவ புலன்விசாரணை பகுதியினரால் அவர்களிடம் விளக்கம் கேட்கப்படுகின்றன எனவும் தெரிய வருகின்றது.

# யாழ்செஞ்சிலுவைவாகனம் கொழும்பில் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ் செஞ்சிலுவைச் சங்க வாகனம் கொழும்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவ

செலவிடப்படவுள்ளதாகவும் திருத்தம் மேற்கொள்ளும் வாகனத்தை இங்கு கொண்டு

எதிர்பார்க்கப்பட்ட தொன்றுதான். ஆனால், அதனை எதிர்க்கட்சிகள் அன்று பொருட்படுத்தவில்லை. தேர்தலில் போட்டியிடுவதென்றே முடிவு செய்தன.

ஏனெனில், ஜனநாயக மீறல்களும், இராணுவ அழுத்தங்களும் தமிழ் மக்களுக்கு மட்டுமே என்றே அவை கருதின. இதனால் பாதிக்கப்படப் போவது தமிழர்கள் என்பதால் ஐ. தே. க வுடன் போட்டியிட்டு கிழக்கு மாகாண அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டினாலேயே செயற்பட்டன. அவ்வாறு இல்லாது விட்டால் அவை தேர்தலைப் புறக்கணித்திருக்கலாம்; இன்று இவ்வாறான கூச்சல் போட்டிருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஏனெனில், முன்னனுபவம் நிறையவே உண்டு.

சிறிலங்கா எதிர்க்கட்சிகள் எப்பொழுதுமே அரசாங்கத்தின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளும், சட்டங்களும் தமிழ் மக்களுக்கு எதிரானவை என்றே கருதின. அவை ஒருபோதும் தம்மைப் பாதிக்கும் என எண்ணவில்லை. ஆகையினால், அரசின் இந்நடவடிக்கைகளைக் கண்டும் காணாமல் இருந்ததோடு, சிலவேளைகளில் வெளிப்படையாகவும் ஆதரித்தன.

ஆனால் அவை தமக்கு எதிராக பாவிக்கப்படும் என்ற போதுதான் அவை தமது தவறுகளை எண்ண முற்பட்டன. ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டம் சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்த போதும், ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் மோசடிகள் அரங்கேறிய போதும் அவை எதனையும் செய்ய முடியாது போய் விட்டது. அதனையும் மௌனமாகவிருந்து ஏற்கவேண்டிய நிலையே வந்தது. அதற்கெதிராக அவர்களினால் எதையும் செய்ய முடியாமல் போய்விட்டது.

ஆனாலும், மீண்டும் தமிழருக்கு எதிரான நடவடிக்கையிலும் ஜனநாயக விரோதச் செயல்களிலும் அரசாங்கம் ஈடுபட்டபோது எதிர்க்கட்சிகள் கடந்த கால அனுபவத்தை மறந்துமீண்டும் தமிழருக்குஎதிரான நடவடிக்கை என்ற ரீதியில் ஏற்றுக் கொண்டதுதான் வேடிக்கையானது; அதாவது, இனவாதம் ஐ. தே. க வின் கண்களை மட்டுமல்ல, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கண்களையும் முற்றாகவே மறைத்திருந்ததுதான் இதற்குக் காரணம். இந்நிலையில்தான், கிழக்கு மாகாணத் தேர்தல் மீண்டும் அவர்களுக்குச் சோதனைக் களம் ஆகிவிட்டது.

இதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கடந்த காலத்தில் தமிழருக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொண்டபோது தம்மை ஒரு பெரும்பான்மை இனம் என்ற ரீதியிலேயே எண்ணிக் கொண்டனர். சிங்கள ஆட்சியாளர்கள் எப்பொழுதும் தம்மில் தங்கியிருப்பார்கள் என்றே அவர்கள் கருதினார்கள்; ஆனால், டி.பி. விஜேதுங்கா முஸ்லிம் காங்கிரசிற்கு நீங்களும் ஒரு சிறுபான்மையினர்தான், நீங்கள் அதிகாரத்தில் இருப்பதை நான் அனுமதிக்கப் போவதில்லை என்பதைத் தெளிவாகவே விளக்கி விட்டார்.

இந் நிலையில் தான் தேர்தலில் போட்டியிடுவதாக அன்றுதீர்மானம் எடுத்தவர்கள், இன்று தேர்தல் மோசடிகள், ஜனநாயக விரோதச் செயல்கள் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. ஏனெனில், இது எதிர்பார்க்கப்பட்டது, கடந்த காலத்தில் ஐ. தே, க. அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இவை எமக்கல்ல, பிறருக்குத்தான் என எண்ணியவர்கள், தமக்கு வரும் போதும் அதிலிருந்து தப்பிக்க முடியாமல் போவதும் வழமையானதுதான்.

# இராணுவம் தடை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவை சங்கத்தின் நடமாடும் வைத்திய பிரிவுக்கு கூட்டு நடவடிக்கை பணியகத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது வரைகாலமும் யாழ் செஞ்சிலுவை சங்கத்தினால் மூன்று நடமாடும் வைத்திய பிரிவுகள் நடாத்தப்பட்டு வந்ததாகவும் அவற்றில் ஒன்றை முற்றாக கூட்டு நடவடிக்கை பிரிவு தடைசெய்ததுடன் மற்றைய இரண்டு பிரிவையும் மட்டுப்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர் காலத்தில் யாழ். செஞ்சிலுவை சங்கத்தின் நடவடிக்கை பெரிய அளவில் கட்டுப்படுத்த இராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு முன்னோடி நடவடிக்கையாக இது அமையும் என எதிர்பார்க்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

வவுனியா நகரப் பகுதியில்

# முஸ்லிம்களின் கடைகள் சிங்களவருக்கு விநியோகம்

வவுனியா நகரின் முஸ்லிம் வர்த்தகருக்கு சொந்தமான அங்காடி கடைகள்உடைக்கப்பட்டு இருபத்தி நான்கு மணி நேரத்தில் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா நகரிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றது.

சிங்கள மக்களின் வாக்கு பெறும் நோக்குடன் ஐ.தே. க. ஆதரவாளரும் இராணுவத்தினரும் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் மேற்படி புதிய கடைகள் மீது தொடர்ந்து இராணுவத்தினர் காவல் புரிவதாக அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

வவுனியா நகரை முழுமையான சிங்கள ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் முகமாகவே இந் நடவடிக்கையின் நோக்கம் என மேலும் தெரிய வருகின்றது. (நி)

# மாசுற்ற சூழல் மனிதனுக்குகேடு மனிதனாலேயே சூழல் மாசுறுகிறது

(வடமராட்சி)

மாசடைந்த சூழலால் மனிதனுக்கு பெரும் தீங்குகள் விளைகின்றது மனிதனால் சூழல் மாசடைகின்றது

இவ்வாறு வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச செயலர் திரு. செ. சிறினிவாசன் வல்லைவெளி ''சுதர்ஸனம்'' மரம் வளர்ப்புத் திட்ட நிர்மாணி திரு. மா. கனகராசா அவர்கட்கு ''இயற்கை நேசன்'' என்ற பட்டமளித்து கௌரவிக்கும் வைபவத்தில் தெரிவித்தார்.

இவ்வைபவம்கடந்தஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் திரு சிறிகுமரன் தலைமையில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து ஆற்றிய உரையில், மக்கள் ஒவ்வொருவரும் தமது நுகர்வுக்காக இயற்கை வளங்களை அழிப்பதிலேயே ஈடுபடுகின்றனர் இயற்கை வளங்களை எமது சொத்தாககருதி பயன்படுத்த வேண்டும்.

அழிக்கும் வளங்களை ஈடு செய்யும் முகமாக சிறு பங்களிப்பையேனும் செய்வதில்லை. ஆனால் திரு. மா. கனகராசா அவர்கள் வல்லை வெளியில் தனது சொந்தச் செலவிலே மரம் வளர்ப்புத் திட்டத்தை திறமையாக தன்னலம் கருதாது செயற்படுவதனால் அவருக்கு 'இயற்கை நேசன்' என்ற பட்டத்தை வழங்குவதில் பெருமையடைகிறேன் என குறிப்பிட்டார்.

மற்றும் பலரும் உரையாற்றியதோடு இறுதியில் கலை கலாசார நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (சிய)

# பேராதனை பல்கலை. நேற்று மூடப்பட்டது

பேராதனைப் பல்கலைக் கழகம் நேற்று முதல் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக வளவிலிருந்து நேற்று மாலைஆறு மணிக்கு முன்னர் மாணவர் அனைவரும் வெளியேறவேண்டுமென பல்கலைக்கழக செனட் அறிவித்தது.

பல்கலைக்கழகத்தின் தற்போதைய நிலைமையைப் பரிசீலித்த பின்னர் செனட்சபை இவ்வாறு முடிவு செய்ததாக உபவேந்தர் பேராசிரியர் ஜே. எம். குணதாஸா கூறியுள்ளார்.

பல்கலைக்கழக வளவுக்குள் மாணவர்கள் பிரவேசிப்பது தடை செய்யப்பட்டு இருப்பதாகவும், நடைபெறவிருந்த பரீட்சைகள் யாவும் பிற்போடப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுதந்திரப்பறவைகள் வெளிவந்துள்ளது

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகார பூர்வமான சுதந்திரப்பறவைகள் மாசி மாத இதழ் இன்று வெளிவருகின்றது. இவ்இதழ் கரவெட்டி கிராமிய பாசறை பற்றி முன்பக்க தலைப்பு செய்தியுடனும் சீதனத் தடைச் சட்டம் பற்றிய ஆசிரியத் தலையங்கத்தோடும் மற்றும் பல கவிதைகள், சிறுகதைகள் நேர் காணல், கட்டுரை என்பனவற்றோடும் வெளிவந்துள்ளது

# மாணவர் விவாதப் போட்டி மகளிர் நிலையம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

1994ஆம் ஆண்டை அனைத்துலக குடும்ப ஆண்டாக ஐ-நா- பிரகடனம் செய்துள்ளதையொட்டி குடும்பத்தில் மகளிரின் பங்கு, குடும்பஉறவு பேணுதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக மாணவரிடையே விவாதப் போட்டி, கலைநிகழ்வு ஆகியவற்றை எதிர்வரும் மார்ச் 10ஆம் திகதி நடத்த மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ளது-

பிரபலமான 8 பாடசாலைகள் பங்குகொள்ளும்விவாதப் போட்டிக்கு மகளிர் எதிர் நோக்கும் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு தலைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன அத்துடன் மகளிர் பணியில் சேவையாற்றும் சிறந்த மகளிரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக மகளிர் அபிவிருத்தி நிலையம் அறிவித்துள்ளது-

# பிரசாரக் கூட்டங்கள்

(வவுனியா)

வவுனியா நகரசபை உள்ளூராட்சி தேர்தல் கூட்டங்கள் வவுனியா நகர மண்டபத்தில் மட்டும் நடை பெறுவதாக வவுனியா நகர சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நகரசபை மண்டபத்தை சுற்றி பொலிஸ் இராணுவ வேலி அமைக்கப்பட்டதை போன்று பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும், சகல பொதுக் கூட்டங்களிலும் பேச்சாளர்களின் பேச்சுக்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு இராணுவ புலன்விசாரணை பகுதியினரால் அவர்களிடம் விளக்கம் கேட்கப்படுகின்றன எனவும் தெரிய வருகின்றது.

# யாழ்செஞ்சிலுவைவாகனம் கொழும்பில் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ் செஞ்சிலுவைச் சங்க வாகனம் கொழும்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் திருத்தம் மேற்கொண்ட பின்னர் அவ் வாகனத்தை இங்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கொழும்பில் இருந்து யாழ் நோக்கி வரும்போது மேற்படி வாகனம் விபத்துக்குள்ளானதாகவும், இதன் திருத்த வேலைக்கு பல லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளதாகவும் திருத்தம் மேற்கொள்ளும் வாகனத்தை இங்கு கொண்டு வா இங்கிருந்து வாகன சாரதியொருவர் கொழும்பு சென்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த தொலைதொடர்பு கருவியுடன் வாகனத்தை இங்கு கொண்டு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகின்றது. (நி)

ஆசிரியர்களுக்கான

# சேவைநீடிப்பு விண்ணப்பம் ஆங்கிலத்தில் நிரப்ப பணிப்பு

ஆசிரியர்களுக்கான சேவை நீடிப்புக்கு விண்ணப்பிக்கும் படிவம்ஆங்கில மொழியில்மட்டும் நிரப்பப்பட வேண்டுமென யாழ்ப்பாண பிராந்திய கல்விப் பணிப்பாளர் பணிப்புரை விடுத்துள்ளார்

ஓய்தியம் பெறும் வயதெல்லையை அடைந்த ஆசிரியர்கள் இதுவரை காலமும் தமிழ் மொழி மூலம் சுயமாகத் தயாரித்த படிவங்களிலேயே சேவை நீடிப்புகோரி விண்ணப்பித்து வந்தமை குறிப்பிடத்தக்கது

எனினும்திணைக்களத்தால் விநியோகிக்கப்படும் ஆங்கில மொழிப் படிவங்களிலேயே ஆசிரியர்கள் இனிமேல் விண்ணப்பிக்கவேண்டுமென கல்விப் பணிப்பாளர் கண்டிப்பான பணிப்புரையை விடுத்துள்ளார்

வடக்கு கிழக்கு மாநில ஆளுநர் பொறுப்பை ஏற்றுள்ள லயனல் பெர்னாண்டோகூட தமிழ் மொழிப் பிரயோகத்தில் அதிகாரிகள் அதிக அக்கறை காட்ட வேண்டுமென அதிகாரிகள் மத்தியில் வலியுறுத்தி வருவது இங்கு சுட்டிக்காட்டப்படத் தக்கதே

# யாழ். பொதுநூலகத்திற்கு போட்டோ பிரதி கருவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் நூலகத்திற்கு ''போட்டோபிரதி கருவி'' ஒன்று கொள்வனவு செய்ய யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதற்கான நடவடிக்கையை தற்சமயம் கொழும்பு சென்றுள்ள யாழ் மாநகர சபை ஆணையாளர் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ் மாநகரசபை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள பட்டப்படிப்பு மற்றும் கல்வியுடன் தொடர்புடைய நூல்களில் காணப்படும் கட்டுரைகள், படங்கள் போன்றவற்றை மாணவர்களுக்கு போட்டோபிரதி செய்து கொடுப்பதற்கு இலகுவாக இந்த கருவி கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**26-2-1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 998

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்!

28-3010, 41-9696, 27-9771, 40-1617, 28-4183, 27-3910, 24-4701, 24-6168, 26-6629, 27-2088, 42-3927, 41-9327, 28-1862, 27-5482.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்!

இல்லை.


### துணைவேந்தர்

இம்மூவரது பெயர்ப்பட்டியலும் இவர்களது சுயவிபரக் கோவையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இவற்றைவிட இம் மூவரதும் இரகசிய அறிக்கைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு வழங்கும். இதைத் தொடர்ந்து இம்மூவரில் ஒருவர் துணைவேந்தராக நியமனம் பெறலாம். (க)

## இலவச வகுப்பு

வி. பு. மா. அமைப்பு (மகவிர்) கரவெட்டி கல்விக்கோட்டத்தினரால் நடாத்தப்படும் சப்புது ரேஜர் இளங்கோ கல்வி வளர்ச்சிக் கழகத்தில் இலவச பகல், இரவு வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. சப்புது ஏகாம்பர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் இவ் வகுப்புக்கள் ஆண்டு 1-10 வரை நடைபெறுகின்றது மாணவர்களுக்கு சிறந்த கல்வி போதிக்கப்பட்டு வருகின்றது.

## இரவு வகுப்பு

வதிரி தமிழ் மன்றத்தில் மாணவரின் கல்வியை நோக்காகக் கொண்டு நடைபெறும் சுயமீட்டல் இரவு 6.30 - 10.00 மணிவரை வெளிச்சத்துடன் நடைபெற்று வருகின்றது. இதில் சகல மாணவர்களும் கலந்து கொள்ளுமாறு வி. பு. மா. அமைப்பு (மகவிர்) கரவெட்டிக் கல்விக் கோட்டத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

### சமாதானத்திற்கு

யினால் ஏற்பட்டது என கருதுகின்றேன். அந்நாள் வாழ்க்கைமறக்கமுடியாத நாளாக கருதுகின்றேன். ஏனெனில் எமது பெற்றோரின்முன்னாலேயே விடுதலைபெற்று அவர்கள் முன்னாலேயே மீண்டும் கைதிகளாக மாறினோம்.

நான் விசேடமான ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன் பௌத்த பிக்குகளுக்கும், கிறிஸ்தவ மதகுருமார்களுக்கும், ஜனாதிபதி உட்பட பொறுப்புவாய்ந்தவர்களிடமும், அரசாங்க உயர் அதிகாரிகளிடமும். தற்போது வடபகுதியில் யுத்தக் கைதிகளாக இருக்கும் கால எல்லையற்ற சிறை அனுபவிக்கும் எனது நண்பர்களுக்கு விடுதலைபெற்று தருமாறு நான் தனிப்பட்ட வேண்டுகோளை விடுக்கின்றேன் என்றார்.

### ஐ. தே. க.

சென்ற அரை மணி நேரத்தின் பின்னர் வேட்பாளரின் வீட்டிற்கு கிரனைற் வீசப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பில் இயங்கும் தமிழ் அமைப்பைச் சேர்ந்த இருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

### சரியான

றுக்கொள்ள முடியாதவையாகும். எனவே பாவனைக்கு உகந்தவை அல்லாத குடும்பப்பதிவு அட்டைகளை தொடர்ந்து வைத்திருப்பதன்மூலம் நீங்கள் எதிர்நோக்கக்கூடிய சிரமங்களை தவிர்க்க 20-3-94க்கு முன்னர் உங்கள் பதிவுகளை குடும்பப்பதிவு அட்டை செயலகங்களின் ஊடாக சரிசெய்து கொள்ளுமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்பப்பதிவு அட்டைப் பகுதியினர் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றனர்.


## தென்னிந்திய திருச்சபை - யாழ். பேராயம்

இளைப்பாறிய பேராயர்

### டி. ஜே. அம்பலவாணர் அவர்களின்

சேவைகளைக் கௌரவிக்கும் கட்டுரைத் தொகுதி

# நூல் வெளியீட்டு விழா

28 - 02 - 1994 திங்கள் மாலை 3-30 மணிக்கு

464, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி - பேராயர் குலேந்திரன் மண்டபத்தில்

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்

பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள்

தலைமையில் நடைபெறும்.

**சிறப்புரை வழங்குவோர்**

- அருட்தந்தை எஸ். ஜே. இம்மானுவேல்
- பேராசிரியர் கா. சிவத்தம்பி
- கம்பவாரிதி இ. ஜெயராஜா
- அருட்திரு. எஸ். ஜெயநேசன்
- விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா
- பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்

அ. ஜெயக்குமாரன்
செயலாளர்
யாழ் தென்னிந்திய திருச்சபை

யாழ். ஆதீனம்,
வட்டுக்கோட்டை.

(இ-8724)


## கலந்துரையாடல்

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின் பதிவுக்கு விண்ணப்பித்த விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இவ்வாண்டு நடைபெறவுள்ள போட்டிகள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. இப்பிரிவுக்குட்பட்ட கழகங்கள் தமது பிரதிநிதிகளை இக் கலந்துரையாடலிற்கு தவறாது அனுப்பி வைக்குமாறு விளையாட்டு அலுவலர் கேட்டுக்கொள்கின்றார்.

## பொதுக்கூட்டம்

வலிகாமம் மேற்கு உதைபந்தாட்டசங்கத்தின்பொதுக் கூட்டம் இன்றுகாலை 9 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் நடைபெறவுள்ளது. வலிகாமம் மேற்கில் பதிவு செய்த அனைத்துகழகங்களின்பழைய பிரதிநிதிகளையும் புதிய பிரதிநிதிகளையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### நிவாரணத்தில்

தற்போது அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இரண்டு லட்சத்து முப்பத்து மூவாயிரம் பேரும், நண்பர், உறவினர் வீடுகளில் தங்கியிருக்கும் மூன்று லட்சத்து இருபத்து நாலாயிரம் பேரும் அமைச்சின் உலர் உணவு நிவாரணத்தைப் பெற்றுவருகிறார்கள்.

இவர்களை மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அவர்களது சொந்த கிராமங்களில் குடியமர்த்துவதற்கும் அப்பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது

மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, அம்பாறை, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்பான கிராமங்களின் பெயர்ப் பட்டியலையும் அமைச்சின் செயலாளர் சம்பந்தப்பட்ட பிரதேசச் செயலாளர்களுக்கும், அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

### பதிவு

இச் செயல் கண்டுபிடிக்கப்படுமிடத்து இவ்வாறு பதியப்படாத எவையும்,

01. மோட்டார் கார்.
    அ. நோயாளர் ஊர்தி
    ஆ. பிரேத ஊர்தி
    இ. ஜீப் வண்டி
    ஈ. ஏனைய பிரத்தியேக பிரயாண ஊர்திகள்
02. லொறி
03. விவசாய உபயோக ஊர்திகள்
    அ. உழவு இயந்திரம்
    ஆ. உழவு இயந்திர இழுவை வண்டி
    இ. இருசக்கர இழுபொறி ஊர்தி


## நேர்முகம் காணல்

**பதவி:** புள்ளிவிபரவியலாளர்

எமது நிறுவனத்தில் வெளிக்களப் புள்ளிவிபரங்கள் திரட்டுவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகுதி:-** க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஆகக்குறைந்தது 3 பாடங்களில் சாதாரண சித்தி; அல்லது க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சாதாரண சித்தியும், இப்பணி தொடர்பான 1 வருட முன் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**வயது:-** 19 வயதிற்குக் குறையாதவராகவும் 30 வயதிற்குமேற்படாதவருமாக இருத்தல்வேண்டும். தகுதி உடையவர்கள் 1994 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2ஆம் நாள் காலை 9-00 மணிக்கு கீழ்க் காணும் முகவரியில் நடைபெறவிருக்கும் நேர்முகங் காணலுக்கு தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும், தகுதிச் சான்றிதழ்களுடனும் நேரடியாக வருகைதரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வருகை தரவேண்டிய முகவரி:-

சேரன் பல்பொருள் வாணிபம்,
செயலகம்,
மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-8725)



யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்க

THE JEWELLERY WORKERS ASSOCIATION

# ஓராண்டு பூர்த்தி நாள்

27 - 02 - 94

யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய எமது யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கம் தனது ஓராண்டைப் பூர்த்தி செய்து இரண்டாவது ஆண்டுக்குள் காலடி ...

முதலாவது வயதை நிறைவு செய்யும் யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள்
வளரும் ஆண்டுகளிலும் அதன் இலட்சியம் ஈடேற வாழ்த்துகின்றோம்

சத்தியா நகைத் தொழிலகம்
176/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-8728)

இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் யாழ். மாவட்ட நகைத்தொழிலாளர் சங்கத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள்

கே. பி. ஆபரணத் தொழிற்சாலை


## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை தெய்வேந்திரராசா (வயிரப்பொடி)

காரைநகர் பூதனைப்பைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தெய்வேந்திரராசா 26-2-94ல் காலமானார். அன்

நகைத் தொழிலாளர் சங்க

# ஓராண்டு பூர்த்தி நாள்

27 - 02 - 94

யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய எமது யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கம் தனது ஓராண்டைப் பூர்த்தி செய்து இரண்டாவது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கின்றது என்பதை அறியத்தரும் இவ் வேளையில் எமது தொழிலாளர்களின் சங்கத்தில் பதிவு செய்யப்படாதோர் தம்மைப் பதிவு செய்துகொள்ளுமாறும், பதிவு செய்தவர்கள் தமது மாதாந்த சந்தாவை சங்கப் பணிமனையில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறும், மேலும் சங்க வளர்ச்சிக்காக தொழிலாளர்களாக முன்வந்து அன்பளிப்புச் செய்வதாகக் கூறிய தொகைப் பணத்தையும் தாமதம் இன்றி செலுத்துவதன் மூலம் சங்க நலனை முன்னெடுத்து செல்வதற்கு உதவிடுவீர்களாக.

நன்றி

யாழ். மாவட்ட
நகைத் தொழிலாளர் சங்க
நிர்வாகிகள்.

(8734)

---

இரண்டாவது ஆண்டில் வீறுநடை போட
வாழ்த்துகிறோம்
யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கத்தை;

## சின்னராசா சிவகுமார்

629, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(சி-8730)

---

இரண்டாவது ஆண்டில் விறுடன் நடையும்
யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கத்தின்
பணிகள் தொடர
மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்

## தங்கராசா விக்கினேஸ்வரன்

15 கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-8731)

---

## சத்தியா நகைத் தொழிலகம்

176/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-8728)

---

இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும்
யாழ். மாவட்ட நகைத்தொழிலாளர் சங்கத்திற்கு
எமது நல்வாழ்த்துக்கள்

## கே. பி. ஆபரணத் தொழிற்சாலை

58, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

(சி-8732)

---

முதலாவது ஆண்டை நிறைவு செய்யும்
யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கத்துக்கு
நல்வாழ்த்துக்கள்

## சபாரட்ணம் சந்திரசேகரம் (சின்னமணி)

635, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(இ-8733)

---

இரண்டாம் ஆண்டில் பிரவேசிக்க
யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கத்துக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

## சின்னத்தம்பி ஜெயராம்
## சத்தியா நகை தொழிலகம்

176/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-8729)

---

பல்லாண்டு காலம் பணிதொடர
யாழ் மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கத்திற்கு
எமது வாழ்த்துக்கள்

## பா. கேதீஸ்வரன்

மாணிக்க பவனம்
86, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(இ-8727)

---

பபி வைத்துள்ளார்.

## பதிவு

இச் செயல் கண்டுபிடிக்கப்படுமிடத்து இவ்வாறு பதியப்படாத எவையும்,

01. மோட்டார் கார்.
   அ. நோயாளர் ஊர்தி
   ஆ. பிரேத ஊர்தி
   இ. ஜீப் வண்டி
   ஈ. ஏனைய பிரத்தியேக பிரயாண ஊர்திகள்
02. லொறி
03. விவசாய உபயோக ஊர்திகள்
   அ. உழவு இயந்திரம்
   ஆ. உழவு இயந்திர இழுவை வண்டி
   இ. இருசக்கர இழுபொறி ஊர்தி
   ஈ. இரு சக்கர இழுவை வண்டி
04. பொதுமக்களின் பிரயாண ஊர்திகள்;
   அ. வான்
   ஆ. மினிபஸ்
   இ. பேருந்து

போன்ற வாகனங்களாகவோ அல்லது இவ்வாறான வாகனங்களின் அடிச்சட்டம், அல்லது இயந்திரமாகவோ அமையுமிடத்து அவ்விடத்திலேயே ரூபா. 1000 குற்றப் பணமாக தமிழீழ காவல் துறையால் தண்டனையாக விதிக்கப்படும். அத்துடன்,

1. முச்சக்கர ஊர்தி
2. மோட்டார் சைக்கிள்

போன்ற ஊர்திகள் அல்லது இவற்றின் அடிச்சட்டம், அல்லது இயந்திரமாக அமையுமிடத்து இவை தொடர்பாக அந்த இடத்திலேயே தமிழீழ காவல் துறையால் ரூபா. 500 குற்றப்பணம் தண்டனையாக விதிக்கப்படும்.

02. இவ்வாறு அவ்விடத்திலேயே குற்றப்பணம் அறவிட்ட பின்பு, அவ்வாறான மோட்டார் ஊர்தியை அல்லது அடிச்சட்டத்தை அல்லது இயந்திரத்தை பதிவு செய்யுமாறு தமிழீழ காவல் துறையால் அவ்வுரிமையாளரை மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்திற்கு அனுப்பி பதிவை மேற்கொள்ளச் செய்தல் வேண்டும்.

03. இவ்வாறு மோட்டார் ஊர்தியையோ அல்லது அதன் அடிச்சட்டம் அல்லது இயந்திரத்தையோ பதிவு செய்யாத எவரிற்கும் அந்த இடத்திலேயே குற்றப்பணம் கட்டும்படி பணிக்கப்படும் போது அதனைச் செய்ய மறுக்கும் எவரையும் தமிழீழ மாவட்ட நீதிமன்றின் முன் காவல் துறையினர் முற்படுத்திசுருக்க முறை விளக்கமொன்றின்பின் இக் குற்றப்பணம் அறவிடப்பட்டு இச் சுற்று நிருபத்தின் பிரிவு. 02இன் படியான நடவடிக்கை நீதிமன்றின் ஊடாக தொடரப்படும்;

---

வருகை தரவேண்டிய முகவரி:-

## சேரன் பல்பொருள் வாணிபம்,

செயலகம்,
மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-8725)

---

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை தெய்வேந்திரராசா (வயிரப்பொடி)

காரைநகர் பூதனைப்பைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தெய்வேந்திரராசா 26-2-94ல் காலமானார்; அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சரஸ்வதி தம்பதிகளின் மகனும், மங்கையற்கரசியின் சகோதரனும், செகராசசிங்கத்தின் மைத்துனரும், ஜெனதீபா, ஜெயந்தி, ஜெனார்த்தனன், ஜெயமதி ஆகியோரின் மாமனாரும், சிதம்பரப்பிள்ளையின் மருமகனும், உருக்குமணியின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மூளாய் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு (27-02-94) இன்று மு. ப. 11 மணியளவில் மூளாய் பித்தனை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்;

மன்னன் தோட்டம்
மூளாய்.

(7628)

தகவல்:
க. சண்முகம்
(மைத்துனர்)

---

## இராமலிங்கம் சுந்தரம் [தில்லைநாதர்]

உடுவிலை பிறப்பிடமாகவும் சங்கானை காளி கோவிலடியில் வசித்தவரும் சுழிபுரம் பத்திரகாளி கோவில்பரிபாலனசபைத்தலைவருமாகிய இராமலிங்கம் சுந்தரம் (தில்லைநாதர்) 26-2-94 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராமலிங்கம் ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகனும் இராமலிங்கம் இராசம்மாவின் மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தவமணி, கதிரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரரும் இன்னப்பு, சுப்பிரமணியம், வடிவேலு ஆகியோரின் மைத்துனரும், வேலுப்பிள்ளை, பாலகிருஸ்ணன் (அபுதாபி), யோகேஸ்வரன் (சுவிஸ்), பாக்கியலஷ்சுமி, சறோஜினிதேவி (லண்டன்), பத்மாவதி, பத்மநாயகி (ஜேர்மன்), தனபாலசிங்கம் (லண்டன்), கபாஜினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சரசுவதி, மங்களராணி, மகாலிங்கம், மகேந்திரன் (லண்டன்), கோபாலகிருஷ்ணன், சந்திரசேகரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கமலினி, தட்சாயினி, கங்காசுதன், சுகிர்தா, சுதாகர், நிசாந்தன், சஜநாத் (லண்டன்), அமிர்தாயினி (லண்டன்), சிந்தாயினி (லண்டன்), மேகலா, விஷ்ணுவர்த்தனன், பவித்திரா, சகானா, சரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-2-94 இன்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்;

காளிகோவிலடி,
சங்கானை.

(7627)

தகவல்,
சு. வேலுப்பிள்ளை
(மகன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.